Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST Tamilnadu Epaper
WhatsApp channel

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 172 03.02.2026 செவ்வாய்க்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 172 ▸▸Tuesday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# உலக நாடுகளிடம் இருந்து முதலீட்டை ஈர்க்கும்: மத்திய பட்ஜெட்டுக்கு அமித் ஷா பாராட்டு

**புதுடில்லி,பிப்.3:**

மத்திய பட்ஜெட் உலக நாடுகளின் முதலீட்டை ஈர்க்கும் வகையில் உள்ளது என்று மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். மத்திய பட்ஜெட் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியதாவது:

பாரம்பரிய துறைகள் முதல் புதிய தலைமுறை துறைகள் வரை என பல்வேறு துறைகளுக்கான மிகச்சிறந்த முதலீட்டுக் களமாக, உலக அரங்கில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்துவதற்கான வேகத்தை இந்த பட்ஜெட் அதிகரிக்கிறது. குறிப்பாக உலக நாடுகளின் முதலீட்டை ஈர்க்கும் பட்ஜெட்.

உற்பத்தி முதல் உள்கட்டமைப்பு வரை, ஆரோக்கியம் முதல் சுற்றுலா வரை, கிராமப்புறங்கள் முதல் செயற்கை நுண்ணறிவு வரை, விளையாட்டு முதல் ஆன்மிகத் தலங்கள் வரை என இந்த பட்ஜெட் ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரத்தில் உள்ள இளைஞர்கள், பெண்கள் மற்றும் விவசாயிகளின் கனவுகளை நனவாக்க உதவும். இதன் மூலம், 2047-க்குள் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைய முடியும்.

நாட்டின் நிதிப் பற்றாக் குறையை 4.5 சதவீதத்துக்கும் குறைவாக வைத்திருக்கும் இலக்கை இந்த பட்ஜெட் எட்டியுள்ளது. இதற்காக பிரதமர் மோடி மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு பாராட்டுகள். மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில், 'மகாத்மா காந்தி கிராம ஸ்வராஜ் யோஜனா' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.



கடற்கரை பகுதிகளில் வசிக்கும் 3 கோடி விவசாயிகள் இதன்மூலம் பயனடைவார்கள். தேங்காய், முந்திரி உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிப்பதுடன் சந்தன மரங்களை வளர்த்து பாதுகாப்பதற்கும் பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட் வெறும் ஒரு ஆண்டுக்கான திட்டம் அல்ல, இது 2047-க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான அடுத்த 25 ஆண்டுகளுக்கான வரைபடம். 'தற்சார்பு இந்தியா' என்பது வெறும் முழக்கம் அல்ல, அது இந்த அரசின் உறுதிமொழி என்பதை மோடி அரசு நிரூபித்துள்ளது. இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் பெயர் சூட்டப்படும்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



**சென்னை,பிப்.3:**

திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு 'வள்ளலார் நெடுஞ்சாலை' என பெயர் சூட்டப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வள்ளலார் தினத்தையொட்டி நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள்; ஓராண்டு தொடர் கொண்டாட்டமாக வள்ளலார் முப்பெரும் விழா; வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லம் புனரமைப்பு என வள்ளலாரின் புகழைப் போற்றுவதன் தொடர்ச்சியாக, அயல் நாட்டினரிடமும் வள்ளலாரின் உயரிய கருத்துகளை கொண்டு சேர்க்க, வரும் பிப்ரவரி 15-ம் தேதி சென்னை கீழ்ப்பாக்கம் ஏகாம்பரநாதர் பள்ளி வளாகத்தில் 'அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026' நடத்தப்படும்.

மேலும், வள்ளலார் நெறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு 'வள்ளலார் நெடுஞ்சாலை' என பெயர் சூட்டப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(3-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை 20
பிறை: தேய்பிறை
திதி
துவிதியை பின்னிரவு 2.59 வரை பிறகு திருதியை.
நட்சத்திரம்:
மகம் நள்ளிரவு 12.24 வரை பிறகு பூரம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00-4.30 மணி.
எமகண்டம்
காலை 9.00-10.30 மணி.
சூலம் -வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி.

மேஷம் ......... ஆரோக்யம்
ரிஷபம்................ நன்மை
மிதுனம் ............. அமைதி
கடகம்.................. செலவு
சிம்மம் .................... வரவு
கன்னி.................. கடமை
துலாம் ................. தாமதம்
விருச்சிகம்........... ஜெயம்
தனுசு.................. ஆதரவு
மகரம் .................. வெற்றி
கும்பம்................ ஆக்கம்
மீனம் ...................... சுபம்

# எப்ஸ்டீன் கோப்புகளில் மோடி பெயர்! நாடாளுமன்றத்தில் விவாதிக்க காங்கிரஸ் நோட்டீஸ்!

**புது டில்லி,பிப்.3:**




எப்ஸ்டீன் கோப்புகள் விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் பெயரும் குறிப்பிடப்பட்டிருப்பது பற்றி மக்களவையில் விவாதிக்கக் கோரி காங்கிரஸ் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கியுள்ளது.

அமெரிக்காவில் பெரும் பணக்காரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன், சிறுமிகளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் சிக்கி, சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

இந்த நிலையில், தற்போது அவரின் குற்றச் செயல்கள் அடங்கிய சுமார் 30 லட்ச பக்கங்கள் கொண்ட ஆவணங்கள், புகைப்படங்கள், விடியோக்கள் அடங்கிய எப்ஸ்டீன் கோப்புகளை அமெரிக்க நீதித்துறை வெளியிட்டுள்ளது.

அதில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது இஸ்ரேல் பயணம் குறித்து சில மின்னஞ்சல் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், மத்திய அரசு தரப்பில் இருந்து மறுப்பு செய்தி வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், மக்களவையில் எப்ஸ்டீன் கோப்புகளின் மோடியின் பெயர் இடம்பெற்றது தொடர்பாக விவாதிக்கக் கோரி, காங்கிரஸ் மக்களவை கொறடா மாணிக்கம் தாகூர் ஒத்திவைப்பு நோட்டீஸ் அளித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

"ஜூலை 9, 2017 தேதியிட்ட, எப்ஸ்டீனால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் ஒரு மின்னஞ்சல், பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஆகியோர் சம்பந்தப்பட்ட சந்திப்புகள் மற்றும் அதைத் தொடர்ந்த இஸ்ரேலுக்கான மோடியின் அதிகாரப்பூர்வ பயணம் பற்றிக் குறிப்பிடுகிறது. இது, தற்போது உலகளவில் பரவி, கடுமையான கேள்விகளையும் ஊகங்களையும் எழுப்புகின்றன. இதுபோன்ற பிரச்னைகள் சர்வதேச அளவில் விவாதிக்கப்படும்போது இந்த அவை மௌனமாக இருக்க முடியாது, மேலும் மத்திய அரசு ஒரு தெளிவான, திட்டவட்டமான மற்றும் அதிகாரப்பூர்வமான விளக்கத்தை அளிக்கவில்லை.

நாங்கள் பிரதமரிடமிருந்து பதில்களைக் கோருகிறோம். எப்ஸ்டீனால் குறிப்பிடப்பட்ட தகவல்களின் நம்பகத்தன்மையை மத்திய அரசு சரிபார்த்ததா? எப்ஸ்டீன், இந்திய அரசுடனோ அல்லது மோடியுடனோ எப்போதாவது தொடர்பு கொண்டாரா?" என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிராவில் போலீஸார் உட்பட 11,000 பேரிடம் ரூ.500 கோடி மோசடி செய்த 3 பேர் கைது

**மும்பை,பிப்.3:**

மகாராஷ்டிராவைச் சேர்ந்த சமீர் நார்வேகர், அவரது மனைவி நேகா மற்றும் அமித் பலாவ் ஆகிய 3 பேரும் சேர்ந்து 2019ம் ஆண்டில் புனேவைத் தலைமையிடமாகக் கொண்டு 'டிரேட் வித் ஜாஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி உள்ளனர்.

இந்நிறுவனம் அறிவித்த கவர்ச்சிகரமான திட்டத்தை நம்பி அம்மாநிலம் முழுவதிலும் இருந்து 1,500 காவல் துறை பணியாளர்கள், ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகள் உட்பட 11,000-க்கும் மேற்பட்டோர் முதலீடு செய்துள்ளனர். பங்குச் சந்தை வர்த்தகம் மற்றும் அது சார்ந்த தொழில்கள் மூலம் முதலீட்டாளர்களுக்கு மாதம் 4% லாபம் தருவதாக ஆசை வார்த்தை கூறி இக்கும்பல் முதலீடுகளை ஈர்த்துள்ளது. சுமார் ரூ.500 கோடி வரை பொதுமக்கள் முதலீடு செய்துள்ளனர்.

இந்நிலையில், அந்த நிறுவனம் திடீரென மூடப்பட்டது. அத்துடன் அதன் உரிமையாளர்கள் தலைமறைவாயினர். பாதிக்கப்பட்டவர்கள் இது தொடர்பாக காவல் துறையில் புகார் செய்தனர். இந்த வழக்கு தானே காவல் துறையின் பொருளாதார குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. இதன் அடிப்படையில், தலைமறைவாக இருந்த 3 பேரையும் பொருளாதார குற்றப் பிரிவு போலீஸார் தேடி வந்தனர். இந்நிலையில், குஜராத் மாநிலத்தில் இருந்த அவர்களை கடந்த வியாழக்கிழமை கைது செய்ததாக போலீஸார் நேற்று தெரிவித்தனர்.

தற்போது தானே பொருளாதார குற்றப்பிரிவினர் அவர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் நிதி பரிவர்த்தனைகளை ஆய்வு செய்து வருகின்றனர். இந்த வழக்கில் மேலும் பலர் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

# "மக்கள் விரோதமானது மத்திய பட்ஜெட்" மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

**மேற்கு வங்கம்,பிப்.3:**

வரும் 202627- க்கான மத்திய பட்ஜெட் மக்கள் விரோத பட்ஜெட் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடுமையாக சாடியுள்ளார். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை டெல்லியில் இன்று மம்தா பானர்ஜி சந்திக்க உள்ளார். இதற்காக, நேற்று கொல்கத்தா விமான நிலையத்துக்கு வந்த அவர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: மத்திய பட்ஜெட் திசையற்றது, தொலைநோக்குப் பார்வையற்றது, செயலற்றது. இது பெண்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவினருக்கு எதிரானது. குறிப்பாக மேற்கு வங்கத்துக்கான அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் இல்லை.

தேர்தலில் தோல்வியடைவோம் என்ற அச்சத்தில் பொருளாதார ரீதியாக வங்கத்தை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். மத்திய பட்ஜெட் பொய்களின் குவியலாக உள்ளது. ஜிஎஸ்டி மூலம்



மேற்கு வங்கத்திலிருந்து வருவாயைப் பெறும் மத்திய அரசு, மாநிலத்திற்கு அதை திருப்பித் தருவதில்லை. நான் ரயில்வே அமைச்சராக இருந்தபோது அறிவித்த டன்குனி - சூரத் சரக்கு வழித்தடத் திட்டம் தொடர்ந்து முடக்கப்பட்டுள்ளது. இது ஒரு மக்கள் விரோத வெற்று பட்ஜெட். இவ்வாறு மம்தா பானர்ஜி கூறினார்.

திரிணமூல் பொதுச் செயலாளர் அபிஷேக் பானர்ஜி கூறுகையில், "81 நிமிட பட்ஜெட் உரையில் மேற்கு வங்கம் என்ற பெயரே இடம் பெறவில்லை. மத்திய அரசு மேற்கு வங்க மக்களை வங்க தேசத்தவர்களாகப் பார்க்கிறதா? 2021 தேர்தல் தோல்விக்குப் பிறகு மாநிலத்துக்கான நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதற்கு வரும் தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்" என்றார்.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ. 7,600 குறைவு!



**சென்னை,பிப்.3:**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 7,600 அதிரடியாக குறைந்துள்ளது.

கடந்த வார இறுதியில் சரிவைக் கண்ட தங்கத்தின் விலை சனிக்கிழமை ஒரு கிராம் ரூ. 14,900-க்கும், ஒரு சவரன் ரூ. 1,19,200-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதனிடையே, 2026 - 27 ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்தார்.

பட்ஜெட்டின் தாக்கம் தங்கம் விலையில் எதிரொலிக்கும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த மக்களுக்கு திங்கள்கிழமை காலை நல்ல செய்தி கிடைத்துள்ளது.

தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ. 950-ம், சவரனுக்கு ரூ. 7,600-ம் குறைந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சென்னையில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி ஒரு கிராம் தங்கம் ரூ. 13,950-க்கும், ஒரு சவரன் ரூ. 1,11,600-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல், வெள்ளியின் விலையும் கிராமுக்கு ரூ. 20-ம், கிலோவுக்கு ரூ. 20,000-ம் குறைந்துள்ளது. இன்றைய காலை நிலவரப்படி, ஒரு கிராம் ரூ. 300-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ. 3,00,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.


# வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்டோரின் வங்கிக் கடன்கள் தள்ளுபடி!

**வயநாடு,பிப்.3:**

வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்து கேரள முதல்வர் பினராயி விஜயன் உத்தரவிட்டுள்ளார்.

பல்வேறு வங்கிகளின் 555 பேர் வாங்கிய ரூ. 18.75 கோடி கடனை கேரள அரசே திருப்பிச் செலுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயநாட்டில் உள்ள முண்டக்கை, சூரல்மலை பகுதிகளில் கடந்த 2024 ஜூலை 30-ஆம் தேதி பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டதில், ஏராளமான வீடுகள் புதைந்து 250-க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.



இந்த கோர சம்பவத்தை தொடர்ந்து, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அமைப்புகளின் துணையுடன் கேரள அரசு உதவி வருகின்றது.

வீடுகளை இழந்தவர்களில் 300 பேருக்கு முதல்கட்டமாக முடிக்கப்பட்ட வீடுகளை கேரள அரசு இம்மாதம் ஒப்படைக்கவுள்ளது.

இந்த நிலையில், வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட 555 பேர் பல்வேறு வங்கிகளில் வாங்கிய ரூ. 18.75 கோடி மதிப்பிலான 1,620 கடன்களை முதல்வர் நிவாரண நிதியில் இருந்து செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, ஏற்கெனவே கேரள வங்கியால் தள்ளுபடி செய்யப்பட்ட ரூ. 93 லட்சம் கடனையும் திருப்பி செலுத்த மாநில அரசு முன்வந்துள்ளது. மக்களின் கடன் மதிப்பீடுகள் பாதிக்காத வகையில் வங்கிகளின் குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்பட தலைமைச் செயலருக்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

# அமைச்சர்கள் ஊதியம், அரசு விருந்தினர் உபசரிப்பு உள்ளிட்ட செலவுகளுக்கு ரூ.1,102 கோடி!

**புது டில்லி,பிப்.3:**

பட்ஜெட்டில் மத்திய அமைச்சர்கள், அமைச்சரவைச் செயலர்கள், பிரதமர் அலுவலக ஊழியர்களின் ஊதியம், அரசு விருந்தினர்கள் உபசரிப்புச் செலவு, முன்னாள் ஆளுநர்களுக்கான



செலவுக்கு ரூ.1,102 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த பட்ஜெட்டில் இந்த செலவு ரூ.978.20 கோடியாக இருந்தது. இந்த முறை அதிகரித்துள்ளது. இது தொடர்பாக பட்ஜெட்டில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: வரும் நிதியாண்டில் மத்திய அமைச்சர்கள், ஊதியம், படி, பயணம், முன்னாள் பிரதமர்களுக்கான ஓய்வூதியம் உள்ளிட்ட செலவுகளுக்காக ரூ.620 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த முறை இது ரூ.483.54 கோடியாக இருந்தது.

தேசிய பாதுகாப்புக் கவுன்சில் செயலகத்துக்கு ரூ.256.19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பட்ஜெட்டைவிட இது குறைவாகும். ஏனெனில் கடந்த பட்ஜெட்டில் இது 279.74 கோடியாக இருந்தது.

மத்திய அரசின் தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்துக்கு ரூ.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த பட்ஜெட்டில் ரூ.61.32 கோடியாக இருந்தது. பிரதமர் அலுவலகத்துக்கான செலவு கடந்த பட்ஜெட்டில் ரூ.68 கோடியாக இருந்த நிலையில் இப்போது ரூ.73.52 கோடியாக உயர்ந்துள்ளது.

அரசு விருந்தினர்களின் வரவேற்பு, உபசரிப்பு உள்ளிட்ட செலவுகளுக்கு கடந்த பட்ஜெட்டில் ரூ.6.20 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், இப்போது ரூ.5.76 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

## அண்ணாமலையார் ஈசானிய குளத்தில் தீர்த்தவாரி



**திருவண்ணாமலை, பிப்.03:** திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் தீர்த்தவாரி அண்ணாமலையாருக்கு தந்தையின் இறப்புச் செய்தி தெரிவிப்பு, அண்ணாமலையாருக்கு ஈசானிய குளத்தில் தீர்த்தவாரி மற்றும் புறப்பாடு ஏராளமான பக்தர்கள் அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஓசூர் சீனிவாசப் பெருமாள் 3 ஆவது வார்ஷிக மஹோற்சவ விழா



**வந்தவாசி, பிப் .03:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த ஓசூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அலர்மேல்மங்கை சமேத ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாள் சன்னிதியில் 3வது வார்ஷிக மஹோத்ஸவ விழா வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த வைபவத்தில் உற்சவ மூர்த்திகளுக்கு யாகசாலை பூஜைகள் மற்றும் சாற்றுமுறை வைபவம் நடைபெற்றது.

பிறகு மேளதாளத்துடன் முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற கருடசேவை வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## விஜய் ஏன் பத்திரிகையாளர்களை சந்திப்பதில்லை? – ராஜ் மோகன் பதில்

**சென்னை, பிப்.03:** என்டிடிவி நடத்திய தமிழ்நாடு உச்சி மாநாட்டை ஒட்டி தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் பேட்டி அளித்ததாக தெரிவிக்கப்பட்டது. விஜயை பேட்டி எடுத்தவர்கள் அவர் இவ்வாறு கூறியதாக பேட்டி அளித்தனர். இது தமிழ்நாட்டு அரசியலில் புதிய விஷயமாக பார்க்கப்பட்டது. விஜயின் இந்த பேட்டி இணையத்தில் விமர்சிக்கப்பட்டது.



இந்நிலையில், விஜய் ஏன் பத்திரிகையாளர்களைச் சந்திப்பது இல்லை? என்று தவெக நிர்வாகி ராஜ் மோகனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த ராஜ் மோகன், ""நான் விஜய்.. இவங்க விஜய்.. இவரு விஜய்.. இந்த அம்மா விஜய்.. நாங்க எல்லாரும் விஜய்.. எளிய வீட்டுப் பிள்ளைகள் பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் அரிய வாய்ப்பை கொடுத்திருக்கிறார். நாங்க எல்லாரும் உங்களைச் சந்திக்கிறோம். சரியான சந்தர்ப்பத்தில் அதுவும் நடக்கும்" என்று வித்தியாசமான பதிலை அளித்தார்.

## எச்.ராஜாவை சந்தித்து நலம் விசாரித்தார் வானதி சீனிவாசன்



**சென்னை, பிப்.03:** நேற்று சென்னையில் நடைபெற்ற தனியார் செய்தி நிறுவனத்தின் நிகழ்ச்சியில் பங்கேற்ற பாஜக தலைவர் எச்.ராஜாவுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. மேடையிலேயே அவர் மயங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அவரை அங்கிருந்தவர்கள் பாலாஜி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் எச்.ராஜா அனுமதிக்கப்பட்டார். அங்கு எச்.ராஜாவுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில் அப்பல்லோ மருத்துவமனை சார்பில் நேற்று எச்.ராஜா உடல்நிலை குறித்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், எச்.ராஜாவுக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாஜக மூத்த தலைவர் எச்.ராஜாவை சந்தித்து பாஜக எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் நலம் விசாரித்தார்

### திருமங்கலம் புல்லமுத்தூர் கிராமத்தில்

## 19வது இறையன்பு கிளை நூலகத்தை இஸ்ரோ விஞ்ஞானி வெங்கட்ராமன் திறந்து வைத்தார்

**மதுரை, பிப்.03:** திருமங்கலம் புல்லமுத்தூர் கிராமத்தில் 19வது இறையன்பு கிளை நூலகத்தை இஸ்ரோ விஞ்ஞானி வெங்கட்ராமன் திறந்து வைத்தார்.



மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகேயுள்ள புல்லமுத்தூரில் இறையன்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள 19வது இறையன்பு கிளை நூலகத்தை ஓய்வு பெற்ற இஸ்ரோ விஞ்ஞானி இரா.வெங்கட்ராமன் திறந்து வைத்தார்.

திருமங்கலம் பகுதியில் பொதுமக்கள் மாணவ மாணவியரின் வாசிப்பு திறனை மேம்படுத்திடும் வகையிலும்,போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்கள் தயாராகிட உதவிடும் வகையிலும் இறையன்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் பல்வேறு கிராமங்களில் இறையன்பு கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு வருகிறது.இதன் ஒருபகுதியாக திருமங்கலம் அருகேயுள்ள புல்லமுத்தூர் கிராமத்தில் 19வது இறையன்பு கிளை நூலகத்தின் துவக்க விழா நேற்று (01.02.2026) மாலை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மாநில நிதி ஆணைய இணை இயக்குநர் (ப.நி.)ராஜசேகரன் தலைமை உரையாற்றினார்.கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் (ப.நி.) திருவள்ளுவன், இறையன்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை பொருளாளர் சக்கையா ஆகியோர் முன்னிலை உரையாற்றினார்கள்.

நிர்வாக அறங்காவலர் பார்த்தசாரதி அனைவரையும் வரவேற்று பேசினார்.

பசுமலை வைத்தியர் சிவகிரி சித்தர் கிரிதரன் மாணவர்களுக்கான சமூக விழிப்புணர்வு பாடல் பாடினார். ஏராளமான பொதுமக்கள் மற்றும் மாணவ ,மாணவிகள் கலந்து கொண்ட இவ்விழாவில் ஓய்வு பெற்ற இஸ்ரோ விஞ்ஞானியும் ஸ்ரீ ஹரிகோட்டா விண்வெளி மையத்தின் இணை இயக்குநருமான முனைவர். வெங்கட்ராமன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர் பொறியாளர் சிவக்குமார் ,சமூக ஆர்வலர் பிகேன் பள்ளி கண்ணன் , நல்லாசிரியர் விஜயகுமார்,சமூக ஆர்வலர் ஆதிமூலம், ரெட்கிராஸ் மகாலிங்கம் ,புல்லமுத்தூர் சுப்புராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அறக்கட்டளையின் அறங்காவலர் சுபா அபிராமி இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஜவஹர்நகர் இறையன்பு கிளை நூலகப் பொறுபபாளர் சீனிவாசகன் அனுபவங்களை விளக்கினார். கிளை நூலகங்களின் ஒருங்கிணைப்பாளர் புருஷோத்தமன் இவ்விழாவிற்க்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

கோவை மகேஸ்வரி அனுப்பிய நூல்கள் புல்லமுத்தூர் இறையன்பு கிளை நூலகத்திற்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சின் நிறைவில் இறையன்பு கிளை நூலக பொறுப்பாளர் சாரதாமணி நன்றி கூறினார்.

## மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல்துறை நினைவூட்டும் பயிற்சி

**திருப்பத்தூர், பிப்.03:** திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V. சியாமளா தேவி, தலைமையில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராஜு, முன்னிலையில், மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல்துறை நினைவூட்டும் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.



இப்பயிற்சியில் காவல்துறை பொது மக்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், குற்றவாளிகள் மற்றும் எதிரிகளை எவ்வாறு கையாள வேண்டும், புகார்களைப் பெற்று எவ்வாறு வழக்குப்பதிவு செய்ய வேண்டும், சாட்சிகளை எவ்வாறு விசாரிக்க வேண்டும், நீதிமன்ற அலுவலக பணிகளை எவ்வாறு கையாள வேண்டும், மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளை எவ்வாறு கையாள வேண்டும், சிறார்களை எவ்வாறு கையாள வேண்டும்.

இணையவழி குற்றங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவது, காவல் நிலையங்களில் பதிவேடுகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும், மது போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் தற்கொலை எண்ணம் உள்ளவர்களிடம் எவ்வாறு அணுக வேண்டும். மனநலம் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆலோசனை (Counselling) வழங்குவது, e-Sakshya Portal-ல் தரவுகளை எவ்வாறு பதிவேற்றம் செய்வது போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சியில் சுமார் 40 காவல்துறையினர் (காவலர் முதல் உதவி ஆய்வாளர் வரை) கலந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், அரசு வழக்கறிஞர் மற்றும் மனநல மருத்துவர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினர்.

## கூட்டணி ரகசியத்தை இன்று உடைக்கும் பிரேமலதா விஜயகாந்த்

**சென்னை, பிப்.03:** தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தமிழ்நாடு முழுவதும் "உள்ளம் தேடி இல்லம் நாடி" என்ற கேப்டன் ரத யாத்திரை நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். அவரது இந்த ரத யாத்திரை நேற்று கன்னியாகுமரி அருகே உள்ள கொட்டாரம் வந்தது.



தொடர்ந்து அங்கு நடந்த கூட்டத்தில் பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:-

சென்னை கோட்டை முதல் கன்னியாகுமரி வரை நடந்த உள்ளம் தேடி இல்லம் நாடி என்ற கேப்டன் ரத யாத்திரை நிகழ்ச்சி இன்று கொட்டாரம் சந்திப்பில் நிறைவு பெற்றுஉள்ளது. இனி நமது கட்சிக்கு எல்லாம் நல்லதாக நடக்கும். படித்தவர்கள் அதிகமாக இருக்கும் மாவட்டம், கன்னியாகுமரி. இங்கு தான் குமரி கண்டம் இருந்தது. அதேபோல தமிழ் மொழி பிறந்ததும் இந்த குமரி கண்டத்தில்தான்.

ஆண்ட கட்சிக்கும், ஆளுகின்ற கட்சிக்கும் சிம்ம சொப்பனமாக தே.மு.தி.க. இருக்கிறது. 2026-ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தே.மு.தி.க. இடம்பெறும் கூட்டணி தான் மகத்தான வெற்றி பெறும். கூட்டணி குறித்து சென்னையில் பிப்ரவரி 3-ந் தேதி (நாளை) அறிவிப்பேன். கன்னியாகுமரி சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒரு சுற்றுலா தலம் ஆகும். தே.மு.தி.க. இடம் பெறும் கட்சி ஆட்சிக்கு வந்ததும் இந்த சுற்றுலா தளம் மேம்படுத்தப்படும்.

தோவாளை மலர் சந்தையில் சென்ட் தொழிற்சாலை அமைக்கப்படும். மீனவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். இலங்கை கடற்படை தாக்குதலில் இருந்து மீனவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். கனிம வளக்கொள்ளை தடுக்கப்படும். மயிலாடியில் கல் சிற்ப பூங்கா அமைக்கப்படும். சுசீந்திரத்தில் தடுப்பணை கட்டப்படும்." என அவர் தெரிவித்தார்.

## கோவையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிர்மாய்ப்பு!

**கோவை, பிப்.03:** கோவை பெரியநாயக்கன் பாளையத்தை அடுத்துள்ள சாந்திமேடு தம்புநகர் பகுதியில் வசித்தவர் கமலேஷ் (வயது 48). இவர் கதிர்நாயக்கன்பாளையம் மின்வாரிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணியாற்றி வந்தார். இவரது மனைவி இலக்கியா. இவர்களது மகள் எக்ஷிதா ஏஞ்சல் (10). 5-ம் வகுப்பு படித்து வந்தார்.

கமலேஷின் மனைவி இலக்கியாவுக்கு புற்றுநோய் பாதிப்பு இருந்ததாக கூறப்படுகிறது.

பல இடங்களில் சிகிச்சை பெற்றும் நோய் பாதிப்பு குறையவில்லை என தெரிகிறது. இதனால் கமலேஷூம், அவரது மனைவியும் மனவேதனையில் இருந்துள்ளனர். இதனால் கமலேஷ் குடும்பத்துடன் உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு செய்துள்ளார். நேற்று இரவு தனது மனைவி மற்றும் மகளுக்கு விஷம் கொடுத்துவிட்டு தானும் குடித்துள்ளார். சிறிது நேரத்தில் 3 பேரும் துடிதுடித்து இறந்துள்ளனர்.

இதற்கிடையே கமலேஷ் உயிர்மாய்ப்பு தொடர்பாக ஒரு வீடியோ பதிவு செய்துள்ளார். தனது மனைவியின் உடல்நல பாதிப்பு சரியாகததால் குடும்பத்துடன் இந்த முடிவை எடுத்ததாக வீடியோவில் பேசி உள்ளார். பின்னர் வீடியோவை அந்த பகுதியில் உள்ள ஒருநபருக்கு அனுப்பி இருக்கிறார்.

இரவு வெகுநேரத்துக்கு பிறகு வீடியோ அனுப்பியதால் அந்த நபர் உடனடியாக வீடியோவை பார்க்கவில்லை. நேற்று அதிகாலை தான் வீடியோவை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார். பின்னர் பெரியநாயக்கன்பாளையம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

போலீசார் விரைந்து சென்று கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு படுக்கையில் கமலேசும், அவரது மனைவி மற்றும் குழந்தை வாயில் நுரை தள்ளியபடி பிணமாக கிடந்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். மனைவியின் நோய் பாதிப்பு காரணமாகதான் அவர்கள் இறந்தார்களா அல்லது எதற்காக அவர்கள் இந்த முடிவை எடுத்தனர் என்பது பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## தை மாதம் பௌர்ணமி வெக்காளியம்மன் சிறப்பு வழிபாடு




**திருவண்ணாமலை, பிப்.03:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கல்பூண்டி கிராமத்தில் அமைந்திருக்கும் வெக்காளியம்மன் ஆலயத்தில் தை மாதம் பௌர்ணமி, தைப்பூசம் முன்னிட்டு ஸ்ரீ ல ஸ்ரீ சந்துரு சாமி அவர்களால் விநாயகர், துர்கா தேவி, வெக்காளியம்மனுக்கும் சிறப்பு அபிஷேகங்கள், அருகம்புல் மாலையுடன் வண்ணமலர் மாலைகளால், எலுமிச்சம் பழ மாலைகளால் அலங்கரித்து, ஸ்ரீ சுதர்சன ஹோமங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பம்பை உடுக்கையுடன், தீர்த்த பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் வெக்காளியம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

### பழையகூடலூரில்

## மறைந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் குருபூஜை



**மயிலாடுதுறை ,பிப் . 03:** மயிலாடுதுறை மாவட்டம் பழையகூடலூரில் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இரெ.இராஜமாணிக்கத்தின் 21-ஆம் ஆண்டு குருபூஜை நடைபெற்றது.

மயிலாடுதுறை அருண்பிரியா பன்நோக்கு மருத்துவமனை தலைவர் டாக்டர் செல்வம், நிர்வாக இயக்குனர் டாக்டர் இரத்தின அருண்குமார், குத்தாலம் ராஜ் வித்யாலயா கல்விக் குழும தலைவர் பாண்டியன், ஓய்வு பெற்ற அரசு அலுவலர் இராஜேந்திரன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் மதிவாணன் உள்ளிட்ட அவரது குடுத்தினர் சிறப்பு பூஜைகள் நடத்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதில் அரசியல் பிரமுகர்கள், வழக்கறிஞர்கள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## 40 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் பணியாளர்கள் 26-ல் வேலைநிறுத்தம்




**சென்னை, பிப்.03:** தமிழகத்தில் டாஸ்மாக் பணியாளர்கள் 40 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் பிப்.26-ம் தேதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் கடந்த 30-ம் தேதி சென்னையில் நடைபெற்றது.

இதில், டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனைக் கடைகளில் 22 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் ஊழியர்களை தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்குதல்) சட்ட அமலாக்க அலுவலர் பிறப்பித்த உத்தரவின்படி, ஒரே தன்மையுடைய பணிகளை செய்து வரும் அனைத்து டாஸ்மாக் கடை ஊழியர்களையும் பணி வரன்முறைப்படுத்த வேண்டும்.

டாஸ்மாக் நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மலைப்பிரதேசப் படி வழங்குவதைப் போல டாஸ்மாக் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும். காலி மதுபாட்டிலை திரும்பப் பெறும் திட்டம் என்ற பெயரில் ஊழியர்களுக்கு வேலைப்பளு திணிப்பதை கைவிட்டு தனி முகமை மூலம் அமல்படுத்த வேண்டும். டாஸ்மாக் நிர்வாகத்தின் மருத்துவ திட்டத்துக்கு மாற்றாக இஎஸ்ஐ திட்டம் அமல்படுத்த வேண்டும்.

டாஸ்மாக் கடை ஊழியர்களின் ஓய்வு வயதை 58 லிருந்து 60 ஆக உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட 40 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் பிப்.26-ம் தேதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call :7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009



## கவிதை அரங்கம்!



விட்டு விடாதீர்கள்
ஆரம்பம் எப்போதும்
கடினமானது

கஷ்டம் மற்றும்
இல்லை என்றால்
போராடும் எண்ணமே
நமக்குள் இல்லாமல்
போய்விடும்


பெரியதாக யோசி
சிறியதாக தொடங்கு

ஒரே நாளில்
உயர்ந்து விட முடியாது

எல்லாத் துயரங்களையும்
ஆற்றிவிடும் சக்தி
காலத்திற்கு இருக்கிறது
நம்பிக்கையுடன் செயல்படு

ஒன்றை வெல்வதற்கு
நீங்கள் ஒன்றுக்கு
மேற்பட்ட முறை
போரிட வேண்டி இருக்கும்

## வாழ்க்கை தத்துவம்...



தன்னை நம்புகிறவன்
எல்லா சோதனைகளையும்
வெல்லுகிறான்


தோல்வி பயம்
இல்லை என்றால்
முயற்சி நிறைவடையும்

பயந்து நின்றவர்கள்
வரலாறு
படைக்க மாட்டார்கள்

ஒவ்வொரு விழிப்பும்
புதிதாக எழுதும் ஒரு பக்கம்
முடித்துவைக்காத புத்தகத்தில்

சுமைகளைச் சிரிப்பாக
மாற்றுவதில் தான்
வாழ்க்கையின்
நிபுணத்துவம் இருக்கிறது

## இரு கோணங்கள்.!



மயிலாடுதுறை தற்காலிக பேருந்து நிலையம்.மக்களின் மனநலன்.. பொதுநலன் நெருக்கடிகளை மறந்து..தேர்தல் கால நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் விதமாக மாவட்ட நூலகக் கட்டடம் கட்டப்பட்டு வருவதால் ஏகப்பட்ட நெரிசலை சந்தித்து பிதுங்கி வழிகிறது.பயணிகள் மட்டுமல்ல..டாஸ்மாக் விரும்பிகளும் அதற்குள்ளாகவே ஊடுபாவி ஊர்வலம் நடத்தியாக வேண்டும்..ஆட்டோ.. வேன்..வெளியூர் பயணிப்பவர்களின் இருசக்கர வாகனங்கள் என பல இடையூறுகளுக் கிடையே..வரும் ஆனா வராது கணக்காக நகரப்பேருந்துக்கான காத்திருப்பு. ஒரு பேருந்து வந்து நின்று பயணிகளை ஏற்றி இறக்குவதற்குள்.. அடுத்த பேருந்து பின்நின்று ஒலி எழுப்பி வழி கேட்கும் தர்ம சங்கடம்...வறுகடலை.. சுண்டல்...சுக்குக்காப்பி... சோன்பட்டி வியாபாரிகள் அலைகழிப்பின் விரக்தியை.. வியாபார முகத்தை மறைத்துக்கொண்டு.. பயணிகளிடமே சிடுசிடுப்பாய் இறக்கி வைக்கும் இன்னல். இறைச்சலும்..கூச்சலும்.. மண் புழுதியும் சாக்கடை நெடியுமாக அலையும் காற்று.. தேசிய உயிரினமான கொசுவின் ரீங்காரத்துடன் கூடிய நலவிசாரிப்பு இவற்றிலிருந்து விலக்கி...இரண்டு ஆட்டோ ஓட்டுனர்களின் அங்கலாய்ப்பு சற்றே ஆசுவாசப்படுத்தியது."இங்க பாடுடா பரமா..தினம் நூறு ருபா நகைச்சீட்டு கட்டி...மூனரை மாசத்துல ரெண்டு கிராம் காயின் வாங்கி வீட்டுக்காரிகிட்ட கொடுத்துடுவேன்.. ஏதோ நம்ம சத்துக்கு அது ஒரு பொருளாதார தன்னிறைவுன்னு வச்சுக்கயேன்..இப்ப அதுக்கும் வச்சுட்டானுங்க ஆப்பு..இப்ப ஒருலட்சத்தி முப்பதை தாண்டுது சவரன்.. ரெண்டு லட்சத்துக்கு மேல போகுமாம்.. நம்ம இனி வெள்ளிநகைக்கு தான் சீட்டு போடனும் போல..."என அலுத்துக்கொண்ட அதே நேரம்...எழுந்து போய் வெற்றிலை எச்சிலை சாக்கடை வாய்க்காலில் உமிழ்ந்துவிட்டு வந்த குப்பை பொறுக்கும் பார்வதியம்மாள்.."ஏ.. அண்ணாத்த.. சுத்தமான பவுனுல செப்பு கலக்காம உருவம் செய்ய முடியாதாமே நெஜமாலுமா.. பவுனு வெல ரெக்ககட்டி பறக்குறதுல யாருக்கு பாதிப்போ என்னவோ...எனக்கு ஒரே குஜாலிப்பு தான்..ரொம்ப லாபந்தான் ..பாத்துக்க.. பொறுக்கி தேத்துன பழைய ஒயருங்கள சேத்து வச்சு கொளுத்தி சுத்தம்பண்ணி எடைக்கு போடுவனா..அப்ப செப்புக்கம்பி..கிலோ முந்நூத்தி இருவதுக்கு எடுப்பாங்க..இப்ப வல்லிசா நாநூறு ரூபா தர்றாங்க..இன்னும் பவுனு ஏறட்டும்.. கிலோ ஐநூறு பார்க்காம விடமாட்டால்ல..இந்த பார்வதி"என்றபடி நடக்க வாயடைத்து நின்றனர் ஆட்டோ ஓட்டுநர்கள்.ஏன் பயணிகளான நாங்களும் தான்.!.

**அரும்பூர். க.குமாரகுரு,**
மயிலாடுதுறை



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*உன் பெயரைக்கூட நான் எழுதுவதில்லை..*
*ஏன் தெரியுமா?*
*"பேனா" முனை உன்னை குத்திவிடுமோ என்று..*

*இப்படிக்கு*
*SPELLING தெரியாமல் சமாளிப்போர் சங்கம்*



## தினம் ஒரு சமையல்



## சுரைக்காய் அடை

**தேவையான பொருட்கள்:**

ரவை - அரை கப்
சர்க்கரை - 1 கப்
பொடியாக நறுக்கிய முந்திரி - 1 தேக்கரண்டி
ஏலக்காய்த்தூள் - அரை தேக்கரண்டி
நெய் - 2 தேக்கரண்டி
சிகப்பு கலர் - சிறிது
மேல் மாவுக்கு
மைதா - ஒன்றரை கப்
பால் - அரை கப்
ஆப்ப சோடா - 1 சிட்டிகை
உப்பு - 1 சிட்டிகை
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**



முதலில் கேசரி செய்து கொள்ள வேண்டும். அதற்கு, ஒரு தேக்கரண்டி நெய்யை காயவைத்து ரவையை வாசனை வரும்வரை வறுத்தெடுங்கள். மீதமுள்ள நெய்யைக் காயவைத்து, முந்திரிப் பருப்பு சேர்த்து பொன்னிறமானதும் ஒன்றரை கப் தண்ணீரைச் சேருங்கள். அத்துடன் சிகப்பு கலரை சேருங்கள்.
நன்கு கொதிக்கும்போது ரவையை சேர்த்து, நன்கு சேர்ந்து வரும்வரை கிளறி இறக்குங்கள்.
ஆறியதும் சிறு உருண்டைகளாகப் பிடித்து வையுங்கள்.
மேல் மாவுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் மைதா மாவுடன் உப்பு, ஆப்ப சோடா, தேவையான அளவு பால், தேவையான தண்ணீர் சேர்த்து இட்லி மாவு பாதத்துக்கு கரைத்துக் கொள்ளுங்கள்.
கேசரி உருண்டைகளை இதில் தோய்த்து எடுத்து, காயும் எண்ணெயில் பொரித்தெடுங்கள்.
வித்தியாசமான சுவையுடன் இருக்கும் இந்த கேசரி போண்டா.

## பெருநாவல் பயன்கள்



நாவல் பழம் (JAMUN) உடலுக்குத் தேவையான இரும்புச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் வைட்டமின் சி, பி போன்ற சத்துக்களை வழங்கி, முக்கியமாக நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவும், செரிமானத்தை மேம்படுத்தவும், ரத்தத்தை சுத்தப்படுத்தவும் உதவும் சிறந்த கோடைக்காலப் பழமாகும். நாவல் மரத்தின் இலைகள், பட்டை, மற்றும் விதைகள் என அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணம் கொண்டவை.

நாவல் பழத்தின் முக்கிய பயன்கள்:

நீரிழிவு மேலாண்மை: நாவல் கொட்டைப்பொடி மற்றும் பழம் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் குறைக்க இன்சுலின் சுரப்பை ஊக்குவிக்க உதவுகிறது.

செரிமானம் மற்றும் வயிறு: நார்ச்சத்து மிகுந்த நாவல் பழம் செரிமானத்தை மேம்படுத்தி, மலச்சிக்கல் பிரச்சனையைத் தீர்க்கும். வயிற்றுப்போக்கு மற்றும் மூலநோய்க்கு இது மருந்தாகப் பயன்படுகிறது.

இரத்த சுத்திகரிப்பு மற்றும் ஹீமோகுளோபின்: இதில் உள்ள இரும்புச்சத்து இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கவும், இரத்தத்தைச் சுத்திகரிக்கவும் உதவுகிறது.

ஆரோக்கியமான தோல்: கறுப்பு நாவல் பழம் தோல் எரிச்சல், அரிப்பு போன்ற பிரச்சனைகளைக் குணப்படுத்த உதவுகிறது.

வாய் மற்றும் தொண்டை ஆரோக்கியம்: நாவல் பட்டையை நீரில் கொதிக்க வைத்து வாய்க்கொப்பளித்தால் ஈறு வீக்கம், வாய் நாற்றம், தொண்டைப்புண் சரியாகும்.

சக்தி (ENERGY): உடலுக்கு உடனுக்குடன் ஆற்றலை வழங்கி, உடல் சோர்வை நீக்குகிறது.

முக்கிய குறிப்பு: நாவல் பழத்தை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது, உப்பில் தொட்டுச் சாப்பிடுவது சிறந்தது.

## ஜெயிலர் 2 படத்தில் ஷாருக் கான் ரோல் இதுதான்.. வெளியான சூப்பர் தகவல்





சூப்பர்ஸ்டார் ரஜினி அடுத்து நடித்து வரும் ஜெயிலர் 2 படத்தில் பல முக்கிய நடிகர்கள் கெஸ்ட் ரோலில் நடிக்கிறார்கள். மோகன்லால், சிவராஜ்குமார், விஜய் சேதுபதி உள்ளிட்ட பலர் கெஸ்ட் ரோலில் நடிப்பதாக முன்பே தகவல் வந்தது.

மேலும் ஹிந்தி நடிகர் ஷாருக் கான் ஒரு முக்கிய ரோலில் படத்தில் தோன்ற இருக்கிறாராம்.

ஷாருக் கான் நடிக்கும் ரோல் பற்றிய விவரம் தற்போது வெளியாகி இருக்கிறது. ரஜினியின் நெருக்கமான நண்பராக தான் ஷாருக் ஜெயிலர் 2 படத்தில் தோன்று கிறாராம்.

பட த்தில் அவர் கதாபாத்தி ரம் மிக முக்கிய மானதாக இருக்கும் என சொல்லப்படு கிறது.

ஜெயிலர் 2 படத்தை PAN இந்தியா அளவில் கொண்டு செல்லவே மற்ற மொழி நடிகர்களின் கெஸ்ட் ரோல் உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.






நகைக்கடை திறப்பு விழா ஒன்றில் கலந்துகொள்ள பிரியங்கா மோகம் செம ஹாட் உடையில் வந்திருக்கும் ஸ்டில்கள் இதோ.

## ஒன்றரை வருடம் படுத்த படுக்கையாக இருந்தேன்.. உருக்கமாக பேசிய நடிகர் அரவிந்த்சாமி

அரவிந்த் சாமி சாக்லேட் பாயாக சினிமாவில் அறிமுகமாகி பல ஹிட் படங்களை கொடுத்துவிட்டு சில ஆண்டுகள் சினிமாவிலிருந்து விலகி இருந்தார் அரவிந்த் சாமி. இதன்பின் கடல் படத்தில் ரீ என்ட்ரி கொடுத்தார்.

ஆனால், இவருக்கு சரியான கம்பேக் படம் என்றால் அது, இயக்குநர் மோகன் ராஜா இயக்கத்தில் வெளிவந்த தனி ஒருவன்தான். இப்படத்தில் சித்தார்த் அபிமன்யு கதாபாத்திரத்தில் வில்லனாக நடித்து அனைவரையும் மிரள வைத்தார்.

கடந்த 2024ஆம் ஆண்டு பிரேம் குமார் இயக்கிய மெய்யழகன் படத்தில் அருள்மொழி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து நம்மை நெகிழ வைத்தார். இதை தொடர்ந்து இவர் நடிப்பில் கடந்த வாரம் காந்தி டாக்ஸ் படம் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நடிகர் அரவிந்த் சாமி பேட்டி ஒன்றில், 'தான் ஒன்றரை வருடம் படுத்த படுக்கையாக இருந்தேன்' என உருக்கமாக



பேசியுள்ளார்.

இதில், "2005ஆம் ஆண்டு ஏற்பட்ட காயம் என்னை ஒன்றரை வருடம் படுக்கையிலேயே வைத்தது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டாம் என முடிவு செய்ததால், அந்த வலி நீண்ட காலம் தொடர்ந்தது. பிறகு அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்த நேரத்தில், கேரளாவை சேர்ந்த ஆயுர்வேத மருத்துவரை சந்தித்தேன். சிகிச்சை தொடங்கிய மூன்று நாட்களிலேயே மீண்டும் நடக்க ஆரம்பித்தேன்" என அரவிந்த் சாமி கூறியுள்ளார்.

# தெய்வங்களும்.. வழிபாட்டு தினங்களும்.



* ஞாயிறு: கண்ணுக்குத் தென்படும் கடவுளான சூரியனை வணங்க ஏதுவான நாள். 'ஆதித்ய ஹிருதயம்' என்ற சுலோகத்தைச் சொல்லி வணங்க வேண்டும்.

* திங்கள்: சிவாலய தரிசனம் நன்மை தரும். தேவாரம், திருவாசகம், அபிராமி அந்தாதி பாடல்களைக் கொண்டு அம்பிகையையும், சிவபெருமானையும் வழிபடுவது நல்லது.

* செவ்வாய்: முருகப்பெருமான் ஆலயத்திற்குச் சென்று, ஆறு விளக்குகள் ஏற்றி வழிபடுவதால் நினைத்தது நடக்கும். எதிரிகள் காணாமல் போவார்கள். கந்தசஷ்டி கவசம் படிப்பதும் நன்மை தரும்.

* புதன்: பெருமாளை சேவிப்பதற்கு ஏற்ற தினம். துளசி மாடத்திற்கு பூஜை செய்ய உகந்த நாள். விஷ்ணு சஹஸ்ரநாமம், நாலாயிர திவ்யபிரபந்தம் ஆகிய பாடல்களைப் பாராயணம் செய்தால் வாழ்வில் வளம் சேரும்.

* வியாழன்: நாம் குருவாக எண்ணும் மகான்களைப் போற்றுவதற்கு உகந்த நாள். சாயிபாபா, ராகவேந்திரர், ராமானுஜர், காஞ்சி பெரியவர் போன்ற மகான்களை ஆராதனை செய்யலாம். பகவத்கீதையைப் பொருள் புரிந்து படிப்பது நலன்களைப் பெற்றுத்தரும்.

* வெள்ளி: மகாலட்சுமி வழிபாடு நன்மைதரும். கோ-பூஜை செய்வது, பஞ்சமுக குத்துவிளக்கை ஏற்றி வைத்து பூஜிப்பது மிகவும் விசேஷம். அம்பிகையின் ஆலயங்களை தரிசிப்பது நன்மை தரும். மகாலட்சுமி ஸ்தோத்ரம், மகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம், அன்னபூர்ணா அஷ்டகம் ஆகியவற்றைப் படிப்பதும் நல்லது.

* சனி: ஆஞ்சநேயர், கருடாழ்வார், நந்திகேஸ்வரர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் என இறைவனுக்குத் தொண்டு செய்து இறைநிலை அடைந்த அடியவர்களை வணங்குவதற்கு சிறப்பான நாள். ராமாயணம், மகாபாரதம், சுந்தரகாண்டம், பெரியபுராணம் முதலான நூல்களைப் படித்தறியவும் இது ஏற்ற தினங்கள் ஆகும்.

*
விநாயகப்பெருமானை எல்லா நாட்களிலும், எல்லா நேரத்திலும் வணங்கலாம். நினைத்தவுடன் நம் மனக்கண் முன் தோன்றுபவர் விநாயகர்

எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி-620015

## தினம் ஒரு தலைவர்கள்

# ஷஹீத் சிவராம் ராஜகுரு வரலாறு

ராஜ்குரு 1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள கேத் என்ற இடத்தில், பூனாவிற்கு அருகிலுள்ள பீமா நதிக்கரையில் பிறந்தார். அவர் தேசஸ்தா பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவரது தாயார் பெயர் ஸ்ரீமதி பார்வதி தேவி மற்றும் அவரது தந்தையின் பெயர் ஸ்ரீ. ஹரிநாரைன் ராஜ்குரு. அவரது முழுப் பெயர் 'ஹரி சிவராம் ராஜ்குரு' அல்லது 'சிவ்ராம் ஹரி ராஜ்குரு'. ஒவ்வொரு ஆகஸ்ட் 24 ஆம் தேதியும், ராஜ்குரு பிறந்தநாளில், சஹீத் ராஜ்குருவின் துணிச்சலான செயல் மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. ராஜ்குருவின் பிறந்த நாள் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.

சஹீத் சிவராம் ராஜகுரு மற்றும் அவரது வாழ்க்கை பற்றிய உண்மைகள் 1914 ஆம் ஆண்டு, அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவரது தந்தை இறந்தார். அவரது குடும்பப் பொறுப்பு அவரது சகோதரரின் தோள்களில் விழுந்தது. அவரது சகோதரர் தின்கர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனது தாய்க்கும் சகோதரருக்கும் உணவளித்தார். அவர் உள்ளூரில் கெட் நகரில் தொடக்கக் கல்வியைப் பெற்றார், பின்னர் புனேவில் (பூனா) உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அவரது தந்தை இறந்தபோது அவரது சகோதரர் அவரைக் கவனித்துக் கொண்டார், மேலும் அவரது குடும்பத்தினர் சிவராம் ராஜ்குருவைப் பற்றி சில கனவுகளைக் கொண்டிருந்தனர், ஆனால் விதி பின்னர் மாறியது.
அவர் சிறு வயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார், மேலும் இளம் வயதிலேயே சேவா தளத்திலும் சேர்ந்தார். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் சிவராம் ராஜ்குருவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய கதாபாத்திரம், ஏனெனில் அவர்தான் ராஜ்குரு அணுகிய முதல் மனிதர். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் நடத்திய பல பயிற்சி முகாம்களிலும் அவர் கலந்து கொண்டார். சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது வழக்கம், மேலும் லோக்மான்ய திலகரின் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

15 வயதில், அவர் வாரணாசிக்கு நடந்து சென்று ஒரு சமஸ்கிருதப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வாரணாசியை அடைய ஆறு நாட்கள் ஆனது என்று கூறப்படுகிறது. அந்தப் பள்ளியில், அவரைப் போன்ற புரட்சியாளர்களான சில புதிய நண்பர்களை அவர் உருவாக்கினார். படிப்படியாக அவரது நோக்கம் தெளிவாகியது. பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளை வீழ்த்துவதே அவரது ஒரே குறிக்கோள். அவர் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இந்தியாவுக்கு எந்த வகையிலும் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது கனவை நனவாக்க, அவர் இந்துஸ்தான் சோசலிச குடியரசு இராணுவத்தில் சேர்ந்தார். பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். சுதந்திரம் பற்றிய ஒரே கருத்தை அவர்கள் தங்கள் இதயங்களிலும் மனங்களிலும் பகிர்ந்து கொண்டதால் அவர்களின் நட்பு மிகவும் வலுவாக வளர்ந்தது.

சைமன் கமிஷனும் அதன் பின்விளைவுகளும் ஆங்கிலேயர்களால் ஒரு புதிய காப்பக ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியர்கள் இந்த புதிய சீர்திருத்தத்தை திருத்துமாறு கோரினர். 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, நாட்டின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், அரசாங்கத் திட்டங்கள் பொதுமக்களை எவ்வாறு சென்றடைகின்றன என்பதை ஆராய்வதற்கும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டது. மேலும் அறிக்கைகளின் அடிப்படையில், புதிய திட்டங்கள் உருவாக்கப்படும், மேலும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்யலாம். இதற்காக, பிரிட்டிஷ்காரர் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஒரு குழுவை அமைத்தார். இந்தக் குழுவிற்கு சர் ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ்காரர் தலைமை தாங்கினார்.

ஏழு எம்.பி.க்கள் கொண்ட ஒருவர் இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறார் என்பதால் இந்திய மக்கள் கோபமடைந்தனர், ஆனால் அந்த ஏழு பேர் கொண்ட குழுவில் ஒரு இந்தியர் கூட இல்லை. 1927 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் பல போராட்டங்களை நடத்தி, சைமன் கமிஷனைப் புறக்கணிக்குமாறு இந்தியர்களிடம் முறையிட்டது, மேலும் அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த லார்ட் பிர்கன்ஹெட்டை சவால் செய்தது. அனைத்து இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குமாறு அவர்கள் செயலாளரிடம் கேட்டுக் கொண்டனர். முகமது அலி ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக்கும் சைமன் கமிஷனைப் புறக்கணிக்க முடிவு செய்தது.



சைமன் கமிஷன் ஜனவரி 1928 இல் இங்கிலாந்தை விட்டு வெளியேறியது, அவர்கள் வந்தவுடன், வழியில் பெரும் போராட்டங்கள் நடந்தன. மக்கள் கமிஷனை கருப்புக் கொடிகளுடன் வரவேற்றனர். இந்தியாவின் கிட்டத்தட்ட அனைத்து முக்கிய நகரங்களிலும் இதேபோன்ற போராட்டங்கள் நடந்தன. அவற்றில் 'சைமன் கமிஷனுக்கு' எதிரான ஒரு போராட்டம் பிரபலமானது அல்லது மிகவும் பிரபலமற்றது. அக்டோபர் 30, 1928 அன்று, கமிஷன் லாகூருக்கு வந்தபோது, அவர்களை கருப்புக் கொடிகளுடன் வரவேற்கத் தயாராக இருந்த போராட்டக்காரர்களை அவர்கள் எதிர்கொண்டனர். அந்த குறிப்பிட்ட போராட்டத்திற்கு இந்திய தேசியவாதியான லாலா லஜ்பத் ராய் தலைமை தாங்கினார். அந்த ஆண்டு பிப்ரவரியில் பஞ்சாப் சட்டமன்றத்தில் இந்த கமிஷனுக்கு எதிராக அவர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் உள்ளூர் போலீசார் போராட்டக்காரர்களை அடிக்கத் தொடங்கினர். அந்த போராட்டத்தில், மற்றவற்றுடன், தலைவராக இருந்த லாலா லஜ்பத் ராய் படுகாயமடைந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் இறந்தார்.

இந்தச் செய்தி இந்தியாவில் காட்டுத்தீ போல பரவியது. மக்கள் ஆத்திரமடைந்தனர். 1928 ஆம் ஆண்டு லாகூரில் பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி ஜே.பி. சாண்டர்ஸைக் கொல்ல பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோருடன் சேர்ந்து ராஜ்குரு ஒரு திட்டத்தை வகுத்தார். லாலா லஜ்பத் ராயின் மரணத்திற்குப் பழிவாங்குவதற்காக. பல இந்தியர்கள் இந்த செயலைப் பாராட்டினர். பல இந்திய குடிமக்கள் இதைக் கண்டித்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் இந்தச் செயலைக் கண்டித்தது. ஆனால் இறுதியில், இது இந்திய மனங்களிலும் இதயங்களிலும் ஒரு புரட்சியைத் தூண்டியது - அவர்களால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறை சுதந்திரப் போராளிகள் புரட்சியை விரைவுபடுத்தினர்.

சிவராம் ராஜகுரு படுகொலைக்குப் பிறகு என்ன நடந்தது?
படுகொலைக்குப் பிறகு, ராஜகுரு ஒரு தப்பியோடிய வாழ்க்கை வாழ்ந்தார். அவர் நாக்பூருக்கு ஒளிந்து கொள்ளச் சென்றார். நாக்பூரில் உள்ள ஒரு ஆர்.எஸ்.எஸ் ஊழியரின் வீட்டில் தஞ்சம் புகுந்து கே.பி. ஹெட்கேவரைச் சந்தித்தார். புனேவுக்குத் திரும்பும் வழியில், அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகிய மூன்று பேரும், மேலும் 21 சக சதிகாரர்களும் கைது செய்யப்பட்டு வெளிப்படையாக வடிவமைக்கப்பட்ட ஒரு விதிமுறையின் கீழ் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் இருந்தனர். அவர்களின் கதை இந்திய மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்தது. ராஜகுரு, இரண்டு துணிச்சலான மனிதர்களுடன் சேர்ந்து, 1931 மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டார். பின்னர், அவர்களின் உடல்கள் சட்லஜ் நதிக்கரையில் தகனம் செய்யப்பட்டன. சிவராம் ராஜகுரு தியாகியானபோது அவருக்கு வயது வெறும் 23. அவருக்கு இரும்பு இதயம், அச்சமற்ற மனப்பான்மை மற்றும் தைரியம் இருந்ததாக அவரது நெருங்கிய கூட்டாளிகள் கூறுகிறார்கள். பகத் சிங்கின் கட்சியின் 'துப்பாக்கி ஏந்தியவர்' அவர். இந்த துணிச்சலான செயல்களைக் கேட்டு, நாம் நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும், நாம் சுதந்திரத்திற்கு தகுதியானவர்களா? சிவராம் ராஜகுரு போன்ற பெரிய மனிதர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அதே மக்களால் இந்த சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. வன்முறை, கலவரங்கள், திருட்டுகள் மற்றும் ஊழல்கள் நம் தேசத்தை முடக்கியுள்ளன. அரசியல்வாதிகள், தங்கள் லாபத்திற்காக, நம் மக்களைப் பிரிக்கிறார்கள், மேலும் வாக்களிப்பின் சக்தி என்ன, நமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெறுவதற்கு எவ்வளவு வன்முறை மற்றும் மனித உயிர் செலவாகும் என்பது மக்களுக்கு இன்னும் தெரியாது. ஜனநாயகத்திற்கும் ஒரு விலை உண்டு. மக்களுக்குத் தேவையானது செயல்பாட்டில் பங்கேற்பதுதான். ஜனநாயகம் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு போன்றது. நாம் வாக்களிக்கும்போது நமது வேலை முடிவடைவதில்லை; மாறாக, அது நாம் வாக்களிக்கும்போது தொடங்குகிறது. நாம் அற்பமான தனிப்பட்ட மற்றும் குறுகிய கால ஆதாயங்களுக்காக விழுகிறோம், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூட மாட்டோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரம் ஒரு விலையில் வருகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நீண்ட காலத்திற்கு முன்பு நடப்பட்ட மரங்களின் பழங்களை நாம் அனுபவித்து வருகிறோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தை பயனுள்ளதாக மாற்ற தேசத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை ☼ செவ்வாய்க்கிழமை ☼ 03.02.2026

# அஜித்பவார் மறைவு: தேர்தல் பிரசாரத்தை கைவிட்ட முதல்-மந்திரி பட்னாவிஸ்



**மும்பை, பிப்.3:**

பாராமதியில் கடந்த ஜனவரி 28-ந்தேதி நடந்த விமான விபத்தில் அஜித்பவார் மரணம் அடைந்தார். இதற்காக 3 நாட்கள் அரசுமுறை துக்கம் கடைபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக, மாநில தேர்தல் ஆணையம் மாவட்ட பஞ்சாயத்து, பஞ்சாயத்து சமிதிகளுக்கான தேர்தல் அட்டவணையை மாற்றி அமைத்தது. அதன்படி தேர்தல் தேதி வருகிற 5-ந்தேதிக்கு பதிலாக 7-ந்தேதி மாற்றப்பட்டது. வாக்கு எண்ணிக்கை 9-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இந்த தேர்தல் பிரசாரத்துக்கான இறுதி நாள் 5-ந்தேதி ஆகும்.

மராட்டியத்தின் முக்கிய தலைவர் ஒருவரின் மறைவு, மாநில அரசியலில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில், முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் மாநிலத்தில் வரவிருக்கும் உள்ளாட்சி தேர்தல் பிரசாரத்தில் தான்பங்கேற்கப்போவதில்லை என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

இந்த மாவட்ட பஞ்சாயத்து தேர்தலுக்காக முதல்-மந்திரி பட்னாவிஸ் 7 நாட்களில் சுமார் 22 பொதுக்கூட்டங்களில் உரையாற்ற திட்டமிட்டிருந்தார். ஆனால், அனைத்து கூட்டங்களையும் அவர் ரத்து செய்துள்ளார். இருப்பினும் கட்சியின் உள்ளூர் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் தேர்தல் பணிகளையும் பிரசாரத்தையும் தடையின்றி முன்னெடுக்குமாறு தேவேந்திர பட்னாவிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

# ஜனாதிபதி மாளிகை வளாக தோட்டம் திறப்பு: பொதுமக்கள் நாளை முதல் பார்வையிடலாம்



**புதுடெல்லி, பிப்.3:**

டெல்லியில் ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் அழகாக வடிவமைக்கப்பட்ட தோட்டம் உள்ளது. 1917-ம் ஆண்டு சர் எட்வின் லுட்யன்ஸ் வடிவமைத்த இந்த தோட்டம் இங்கிலாந்து மற்றும் முகலாய பாணிகளை கொண்டு வடிவமைக்கப்பட்டது. இதில் பல்வேறு மலர் தோட்டங்கள் உள்ளன. முன்னாள் ஜனாதிபதிகள் அப்துல் கலாம், ராம்நாத் கோவிந்த் ஆகியோரின் ஆட்சி காலத்தில், மூலிகை, போன்சாய் தோட்டம் மற்றும் ஆரோக்கிய வனம் போன்ற கூடுதல் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்த தோட்டம் ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்தில் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படுவது வழக்கம். அதுபோல் இந்த ஆண்டு இந்த தோட்டம் பொதுமக்கள் பார்வைக்காக (செவ்வாய்க்கிழமை) திறக்கப்பட இருக்கிறது. இதற்கான திறப்பு விழா இன்று நடைபெற்றது. விழாவில் ஜனாதிபதி முர்மு கலந்து கொண்டு தோட்டத்தின் நுழைவாயிலாக செயல்படும் பிரதான நீரூற்றில் நின்று, அவர் தோட்டத்தை பொதுமக்களுக்கு திறந்து வைத்தார். இந்த தோட்டத்தில் டூலிப்ஸ் மற்றும் பல்வேறு வகையான ரோஜாக்களை தவிர பீம், அர்ஜுன், அந்தர் தெரசா உள்ளிட்ட 145 வகையான ரோஜாக்கள் உள்ளன. மேலும் 80-க்கும் மேற்பட்ட பிற பூக்கள் உள்ளன. இந்த ஆண்டு பார்வையாளர்கள் ஒரு சலசலக்கும் ஓடை, அருவிகளுடன் கூடிய பாதைகள் கொண்ட தோட்டத்தை காணலாம். மேலும் 225 ஆண்டுகள் பழமையான ஷீஷாம் மரத்துடன் குழந்தைகளுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்டு உள்ளது.

வாரத்தில் 6 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை மக்கள் இந்த தோட்டத்தை பார்வையிடலாம். பராமரிப்பு நாளான திங்கட்கிழமை, மார்ச் 4-ந்தேதி ஹோலி பண்டிகை அன்று அனுமதி இல்லை. மார்ச் 31-ந்தேதி வரை இந்த தோட்டம் திறந்து இருக்கும். இந்த பூங்கா வளாகம் மார்ச் 3 (பாதுகாப்பு படை வீரர்களுக்கு), மார்ச் 5 (மூத்த குடிமக்களுக்கு), மார்ச் 10 (பெண்கள் மற்றும் பழங்குடியின பெண்களின் சுயஉதவி குழுக்களுக்கு), மார்ச் 13 மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு பிரிவினருக்காக திறக்கப்படும்.

அங்குள்ள அருங்காட்சியகத்தையும் மக்கள் பார்வையிடலாம். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஜனாதிபதி மாளிகை முன் வளாகத்தில் நடைபெறும் பாதுகாப்பு படையினர் அணி வகுப்பையும் பார்வையிடலாம். இந்த தோட்டத்தை பார்வையிட இணையதளத்தில் ஆன்லைன் முறையில் மட்டுமே டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியும். பூங்காவில் நுழைய முன்பதிவு மற்றும் அனுமதி இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் லேசான நிலநடுக்கம்; ரிக்டர் அளவில் 4.6 ஆக பதிவு

**ஸ்ரீநகர், பிப்.3:**

ஜம்மு-காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் நேற்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அம்மாநிலத்தில் பதான் பகுதியை மையமாக கொண்டு நேற்று அதிகாலை 5.35 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 4.6 ஆக இந்த நிலநடுக்கம் பதிவானது. நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் லேசாக அதிர்ந்தன. அதேவேளை, இந்த நிலநடுக்கத்தில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

# தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு 25% நிதி அதிகரிப்பு

**புதுடெல்லி, பிப்.3:**

2026-27ம் நிதியாண்டில் தலைமை தேர்தல் ஆணையத்துக்காக ரூ.382.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2025-26-ல் ஒதுக்கப்பட்டதை விட 25% அதிகம். இதில் ரூ.367.69 கோடி நிதி, தேர்தல் தொடர்பான செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிதி, நிர்வாக மற்றும் செயல்பாட்டுச் செல வினங்களுக்காக செலவிடப்படும். மேலும், வாக்காளர் அடையாள அட்டை தயாரிப்பதற்காக ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

# மத்திய பட்ஜெட் மிகவும் மந்தமானது: ப.சிதம்பரம் விமர்சனம்

**புதுடெல்லி, பிப்.3:**

மத்திய அரசின் பட்ஜெட் மிகவும் மந்தமான பட்ஜெட்டாக இருப்பதாக முன்னாள் மத்திய நிதியமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் குறித்து முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருப்பதாவது: வேலை வாய்ப்பின்மை, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, நாட்டின் முன் எழுந்துள்ள பல சவால்களை மத்திய நிதி அமைச்சர் கவனத்தில் கொள்ளவில்லை. ரூபாயின் மதிப்பை வலுப்படுத்த எந்த நடவடிக்கையும் பட்ஜெட்டில் குறிப்பிடப்படவில்லை. முக்கியமான துறைகளுக்கான ஒதுக்கீடு மற்றும் செலவினம் குறைந்துள்ளது. மத்திய அரசின் மூலதனச் செலவு குறைந்துள்ளது. ஜல்ஜீவன் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு ரூ.67 ஆயிரம் கோடியில் இருந்து ரூ.17 ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு நிலவரங்கள் கவலை அளிப்பதாகவே உள்ளன. நிதிப்பற்றாக்குறை சொற்ப அளவாக 0.1 சதவீதம் மட்டுமே குறைக்கப்பட்டு உள்ளது. பொருளாதார வியூகப்படி பார்த்தால் மத்திய பட்ஜெட் மிகப்பெரிய தோல்வி அடைந்துள்ளது. எதிர்பார்ப்புகளுக்கு சற்றும் ஈடுகொடுக்காத மந்தமான பட்ஜெட்டாக இருக்கிறது. இதை மந்தமான பட்ஜெட் என்றே சொல்லலாம். நாட்டின் உண்மையான நெருக்கடி விஷயங்களுக்கு பட்ஜெட்டில் எந்தப் பதிலும் இல்லை. வேலையில்லாத இளைஞர்கள், உற்பத்தி வீழ்ச்சி, முதலீட்டாளர்கள் மூலதனத்தை திரும்பப் பெறுதல், வீட்டு சேமிப்பு வீழ்ச்சியடைதல், துயரத்தில் இருக்கும் விவசாயிகள் உள்ளிட்ட நாட்டின் உண்மையான சவால்களை மத்திய அரசு கவனிக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாலஸ்தீனம் தனி நாடாக உருவாக இந்தியா ஆதரவு



**புதுடெல்லி, பிப்.3:**

இந்தியா மற்றும் 19 அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நடைபெற்றது. அப்போது, எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு இரு தரப்பிலும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பயங்கரவாத வலையமைப்புகள், நிதி மற்றும் உட்கட்டமைப்புகளை அழிக்க சர்வதேச அளவிலான கூட்டு செயல்பாடு அவசியம் என்பதை, கூட்டத்தில் பங்கேற்ற அரபு நாடுகள் ஒப்புக்கொண்டன.

இந்தக் கூட்டத்திற்கு பின், நம் நாடும் அரபு நாடுகளும் இணைந்து கூட்டு பிரகடனத்தை வெளியிட்டன. அதில், பயங்கரவாதம் எந்த வடிவில் வந்தாலும் அதை ஒழிக்க தேவையான கூட்டுறவை தீவிரப்படுத்துவது என்றும், பயங்கரவாதத்திற்கு எதிராக நம் நாடு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையான மற்றும் நிலையான ஆதரவு தருவது என்றும் அரபு நாடுகள் உறுதியளித்துள்ளன.

இந்த கூட்டத்தின் போது, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்னைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, பாலஸ்தீனம் சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடாக உருவாக வேண்டும் என்பதற்கு, நம் நாடு முழு ஆதரவு அளிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

காசாவில் புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வசதியாக, அரபு நாடுகளின் திட்டப்படி சண்டை நிறுத்தம் முழுதாக அமல்படுத்த வேண்டும் என இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக, கடந்த ஆண்டு எகிப்தின் ஷரம் எல் -ஷேக்கில் நடந்த அமைதி உச்சி மாநாட்டில் காசா தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இந்தியா வரவேற்பு அளித்தது.

டிரம்ப் சமீபத்தில் காசா அமைதி வாரியத்தை அமைத்த நிலையில், இந்தியா - அரபு நாடுகள் இடையே நடந்த இந்த கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# மருத்துவமனையில் உதவி மறுப்பு.. தள்ளுவண்டியில் 12.கி.மீ. கொண்டு செல்லப்பட்ட பெண் உடல்!

**ஃபரீதாபாத், பிப்.3:**

பெண்ணின் உடலை தள்ளுவண்டியில் அவரது கணவர் ஏற்றிச் செல்வதையும், அவர்களது மகன் பெண்ணின் முகத்தை துணியால் மூடியபடி செல்வதையும் காட்டும் விடியோ சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து இந்த விஷயம் வெளிச்சத்துக்கு வந்தது. இச்சம்பவம் ஹரியாணா மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, இதுகுறித்து விசாரிக்க மருத்துவமனை நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. உயிரிழந்த அனுராதா தேவி (35), தில்லி எய்ம்ஸ் உள்பட பல மருத்துவமனைகளில் பல மாதங்களாக சிகிச்சை பெற்று வந்தார். அவரது கணவர், ஜுன்ஜுன், தனது சேமிப்பு தீர்ந்துவிட்டதாகவும், சரூர்பூர் கிராமத்தில் உள்ள அவர்களது வீட்டிற்கு உடலை எடுத்துச் செல்ல ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்ய மருத்துவமனை மருத்துவிட்டதாகவும் தெரிவித்தார். தனியார் ஆம்புலன்ஸ் சேவைகள் ரூ.500 முதல் ரூ.700 வரை கேட்டதால் தள்ளுவண்டியை ஏற்பாடு செய்ததாக அவர் தெரிவித்தார். வீட்டை சென்றடையும் வரை அவர் வண்டியுடன் 12 கி.மீ. நடந்து சென்றார். பின்னர், இறுதிச் சடங்குகளைச் செய்ய பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கடன் வாங்கியதாக அவர் கூறினார்.

'அரசு ஆம்புலன்ஸ்கள் உடல்களை ஏற்றிச் செல்வதற்காக இல்லை என்றும், செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனங்கள் கிடைக்கும். ஆனால், அதற்கும் முறையான கோரிக்கை தேவை' என்று மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக ஃபரீதாபாத் செஞ்சிலுவைச் சங்கச் செயலர் பிஜேந்தர் சௌரத் கூறுகையில், மரணம் குறித்து மருத்தவமனை கட்டுப்பாட்டு அறை தகவல் தெரிவித்தால் வாகனம் இலவசமாக வழங்கப்படும். ஆனால், இந்த விவகாரத்தில் எங்களுக்கு எந்த அழைப்பும் வரவில்லை' என தெரிவித்தார். இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த மருத்துவமனையில் சிவில் சர்ஜன் டாக்டர் ஜெயந்த் அஹுஜா, 'முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் ராம் பகத் தலைமையில் மூத்த மருத்துவர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ளது. குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த பிறகு, மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியமே காரணம் என கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' எனத் தெரிவித்தார்.

# 6 ஆண்டுகளுக்குப் பின்.. சீனாவின் ஷாங்காய்க்கு ஏர் இந்தியா நேரடி விமான சேவை!

**புதுடெல்லி, பிப்.3:**

டில்லி - ஷாங்காய் இடையே 6 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நேரடி விமான சேவையை ஏர் இந்தியா நிறுவனம் தொடங்கியுள்ளது. கடந்த 2020-ஆம் ஆண்டு தொடக்கத்தில், இந்தியா - சீனா இடையேயான நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டிருந்தத நிலையில், சுமார் 6 ஆண்டுகளுக்குப்பின் 2026, பிப்ரவரியில் இருநாடுகளுக்குமிடையே மீண்டும் நேரடி விமானம் இயக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஷாங்காய் மாநகரின் புடோங் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புதுதில்லிக்கு 230 பயணிகளுடன் ஏர் இந்தியாவின் போயிங் 787 ரக விமானம் இன்று(பிப். 1) காலை புறப்பட்டது என்று இந்தியத் தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே மக்கள் தொடர்பு, வணிகம், கல்வி உள்பட நிறுவன ரீதியான தொடர்புக்கு பலனிக்கும் என்று தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அணுமின் உற்பத்தி திட்டங்கள்: 2035-ஆம் ஆண்டு வரை சுங்க வரி விலக்கு நீட்டிப்பு!



**புதுடெல்லி, பிப்.3:**

அணுமின் உற்பத்தி திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்க வரியில் இருந்து அளிக்கப்பட்ட விலக்கு 2035-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையில் கூறுகையில், 'அணுமின் உற்பத்தி திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்த வரி விலக்கு 2035-ஆம் ஆண்டு வரை, அனைத்து அணுமின் உற்பத்தி நிலையங்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது.

முக்கிய கனிமங்களை கையாள்வதற்கு தேவைப்படும் மூலதனப் பொருள்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்க வரியில் இருந்து விலக்களிக்கப்படுகிறது.

இதேபோல சிவில், பயிற்சி மற்றும் பிற விமானங்களின் தயாரிப்புக்குத் தேவைப்படும் கருவிகள், பாகங்களுக்கு அடிப்படை சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. சிவில் மற்றும் பாதுகாப்புத் துறையில் விமானப் போக்குவரத்துத் தொழில் துறையை ஊக்குவிக்கும் நோக்கில், இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விலங்கியல் பூங்காக்களில் காட்சிப்படுத்தப்படும் மிருகங்கள் மற்றும் பறவைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அடிப்படை சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

அதில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றை இறக்குமதி செய்ய 30 சதவீதம் வரி விதிக்கப்படும்' என்று தெரிவித்தார்.

# ஜனவரியில் ஜிஎஸ்டி வசூல் ரூ.1.93 லட்சம் கோடி! 6.2% அதிகரிப்பு!




**புதுடெல்லி, பிப்.3:**

நாட்டில் கடந்த ஜனவரி மாதம் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) ரூ.1.93 லட்சம் கோடி வசூலாகியுள்ளது. 2025, ஜனவரி மாதத்தை ஒப்பிடுகையில் (ரூ.1.82 லட்சம் கோடி) இது 6.2 சதவீதம் அதிகமாகும்.

இதுகுறித்து மத்திய அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தரவுகளில், 'கடந்த ஜனவரியில் ரூ.1.93 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகியுள்ளது. இதில் உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் ரூ.1.41 லட்சம் கோடி வசூலாகி 4.8 சதவீதம் அதிகரித்துள்ளது. சரக்கு இறக்குமதி மூலம் ரூ.52,253 கோடி வருவாய் கிடைக்கப் பெற்று 10.1 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஜனவரியில் நிகர ஜிஎஸ்டி வருவாய் 7.6 சதவீதம் அதிகரித்து ரூ.1.71 லட்சம் கோடியாக உள்ளது. திருப்பியளிக்கப்பட்ட தொகை 3.1 சதவீதம் குறைந்து ரூ.22,665 கோடியாக பதிவானது.

கடந்த ஆண்டு ஜனவரியில் செஸ் வரி வருவாய் ரூ.13,009 கோடியாக இருந்த நிலையில், நிகழாண்டு ஜனவரியில் ரூ.5,786 கோடியாக சரிந்துள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

# வரதட்சணை கொடுமையால் இளம்பெண் விஷம் குடித்து தற்கொலை

**பெங்களூரு, பிப்.3:**

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டம் பேலூர் தாலுகா ஹுனசேகரே கிராமத்தை சேர்ந்தவர் இந்திரா (வயது 24). இவருக்கு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ஹாசன் தாலுகா எச்.மைலள்ளி கிராமத்தை சேர்ந்த சாமி என்பவருடன் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது, இந்திராவின் பெற்றோர் 60 கிராம் தங்கம் மற்றும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரொக்கத்தை வரதட்சணையாக கொடுத்துள்ளனர்.

இதையடுத்து, தம்பதிக்கு திருமணமாகி 4 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. இதனால், தம்பதிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. மேலும், சாமியின் தாய் சங்கரம்மா மற்றும் சகோதரி புட்டி ஆகிய 2 பேரும் சேர்ந்து இந்திராவை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இதையடுத்து இந்திராவின் பெற்றோர் அவரை சமாதானம் செய்து கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர். இதற்கிடையே, சாமி பேக்கரி கடை நடத்தி வந்தார். அதில், நஷ்டம் ஏற்பட்டதால் பேக்கரியை மூடிவிட்டு அவர் கூலிவேலைக்கு செல்ல தொடங்கினார். ஆனால், கூலிவேலைக்கு செல்ல மனம் இல்லாமல் மீண்டும் தொழில் தொடங்க வேண்டும் என கூறி இந்திராவிடம் கூடுதல் வரதட்சணை கேட்டு சாமி கொடுமைப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் தம்பதி இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது, ஆத்திரமடைந்த இந்திரா விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இதைப்பார்த்த, சாமி மற்றும் அவரது குடும்பத்தினர், அவரை ஹாசனில் உள்ள கிம்ஸ் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். ஆனாலும், இந்திரா சிகிச்சை பலன் அளிக்காமல் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த இந்திராவின் பெற்றோர், கொடுத்த புகாரின்பேரில் துட்டா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும் ரூ.75,000 வரையிலான பொருள்களுக்கு வரி இல்லை!

**புதுடெல்லி, பிப்.3:**

வெளிநாடுகளில் இருந்து இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளி சுற்றுலாப் பயணிகள் தங்களுடன் வரியின்றி கொண்டுவர அனுமதிக்கப்படும் பொருள்களின் மதிப்பு ரூ.50,000-இல் இருந்து ரூ.75,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட்டில் இது தொடர்பான அறிவிப்பை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்ட நிலையில், பயணியர் உடைமைகள் விதிமுறைகள்-2026 வெளியிடப்பட்டது.

அதன்படி, வெளிநாடுகளில் இருந்து இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் தங்களுடன் வரியின்றி கொண்டுவர அனுமதிக்கப்படும் பொருள்களின் மதிப்பு உச்சவரம்பு ரூ.50,000-இல் இருந்து ரூ.75,000-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், வெளிநாட்டை பூர்விகமாக கொண்ட பயணிகள், இதுவரை ரூ.15,000 வரையிலான மதிப்புள்ள பொருள்களை வரியின்றி கொண்டுவர அனுமதிக்கப்பட்டனர். இப்போது இது ரூ.25,000-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் ஓராண்டுக்கும் மேலாக வசிக்கும் இந்தியர் அல்லது இந்திய வம்சாவளி நபர், அவர் பெண் என்றால் 40 கிராம் நகைகள் (தங்கம், வெள்ளி, பிளாட்டினம், மதிப்புமிக்க பிற உலோகங்கள்) வரையும், ஆண் என்றால் 20 கிராம் நகைகள் வரையும் வரியின்றி எடுத்துவர அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ம.பி.யில் சாலையில் நடனமாடியபடி சிக்னல் கொடுத்த தலைமை காவலர் பதவி இறக்கம்

**இந்தூர், பிப்.3:**

மத்தியப் பிரதேசம் இந்தூரில் பணியாற்றும் போக்குவரத்து தலைமைக் காவலர் ரஞ்சித் சிங். இவர் மைக்கேல் ஜாக்சன் போல் 'மூன்வாக்' நடனமாடி சிக்னல் கொடுத்தார். இந்த வீடியோ டி.வி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாக பரவியது. இது குறித்த மத்தியப் பிரதேச காவல்துறை விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தலைமைக் காவலராக பணியாற்றிய ரஞ்சித் சிங்கை, காவலராக பதவியிறக்கம் செய்து கூடுதல் துணை ஆணையர் ராஜேஸ் தந்தோத்யா உத்தரவிட்டுள்ளார். ரஞ்சித் சிங் மீது ஒரு பெண் அளித்த புகாரில் ஏற்கெனவே ஒரு விசாரணை நடந்து வருகிறது. சமூகம் ஊடகம் மூலம் தொடர்பு கொண்ட பெண் ஒருவருக்கு, தன்னை பார்க்க இந்தூர் வரும்படியும், அதற்கு விமான டிக்கெட் ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளார். இது குறித்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில் ரஞ்சித் சிங் மீது ஏற்கெனவே துறை ரீதியான விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சாலையில் நடனமாடி போக்குவரத்து பணியில் ஈடுபட்டதற்காக அவர் பதவி யிறக்கம் செய்யப்பட்டுள்ளார்.




## விருத்தாசலம் | சாலை விபத்தில் கல்லூரி மாணவர்கள் 3 பேர் உயிரிழப்பு




**விருத்தாசலம், பிப்.03:** திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில், கடலூர் மாவட்டம் ராமநத்தம் அடுத்த லக்கூர் பகுதியில் தனியார் வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

இக்கல்லூரியில் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த தரணிசெல்வன் (20), சிதம்பரம் நிஷாந்த் (20), திருவண்ணாமலை விநாயகமூர்த்தி (20), செங்கம் சசிக்குமார் (20), திண்டிவனம் மேல்பாக்கம் ராஜேஷ் (18), திருச்சி மாவட்டம் லால்குடி மதுப்பிரியன் (19) ஆகியோர் பி.எஸ்சி. பயின்று வந்தனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை அவர்கள் 6 பேரும் காரில் எழுத்தூர் அருகே சென்ற போது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார், எதிர்பாராதவிதமாக சாலையின் தடுப்புக் கட்டையில் மோதி, எதிர் திசையில் வந்துகொண்டிருந்த சுற்றுலாப் பேருந்து மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் காரில் பயணித்த தரணிச்செல்வன், விநாயகமூர்த்தி, நிஷாந்த் ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், ராஜேஷ், மதுப்ரியன், சசிக்குமார் ஆகியோர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீஸார் காயமடைந்தவர்களை மீட்டு, பெரம்பலூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

## பெரியநாயக்கன்பாளையத்தில் மனைவி-மகளுடன் மின்வாரிய அதிகாரி தற்கொலை

**கவுண்டம்பாளையம், பிப்.03:** கோவை பெரியநாயக்கன் பாளையத்தை அடுத்துள்ள சாந்திமேடு தம்புநகர் பகுதியில் வசித்தவர் கமலேஷ் (வயது 48). இவர் கதிர்நாயக்கன்பாளையம் மின்வாரிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணியாற்றி வந்தார். இவரது மனைவி இலக்கியா. இவர்களது மகள் யாஷிகா (10). 5-ம் வகுப்பு படித்து வந்தார்.

கமலேசின் மனைவி இலக்கியாவுக்கு புற்றுநோய் பாதிப்பு இருந்ததாக கூறப்படுகிறது. பல இடங்களில் சிகிச்சை பெற்றும் நோய் பாதிப்பு குறையவில்லை என தெரிகிறது. இதனால் கமலேசும், அவரது மனைவியும் மனவேதனையில் இருந்துள்ளனர். இதனால் கமலேஷ் குடும்பத்துடன் தற்கொலை செய்ய முடிவு செய்துள்ளார். நேற்று இரவு தனது மனைவி மற்றும் மகளுக்கு விஷம் கொடுத்து விட்டு தானும் குடித்துள்ளார். சிறிது நேரத்தில் 3 பேரும் துடிதுடித்து இறந்துள்ளனர்.

இதற்கிடையே கமலேஷ் தற்கொலை செய்வதற்கு முன்பு ஒரு வீடியோ பதிவு செய்துள்ளார். தனது மனைவியின் உடல்நல பாதிப்பு சரியாகாததால் குடும்பத்துடன் தற்கொலை செய்யப்போவதாக வீடியோவில் பேசி உள்ளார். பின்னர் வீடியோவை அந்த பகுதியில் உள்ள ஒருநபருக்கு அனுப்பி இருக்கிறார்.

இரவு வெகுநேரத்துக்கு பிறகு வீடியோ அனுப்பியதால் அந்த நபர் உடனடியாக வீடியோவை பார்க்கவில்லை. இன்று அதிகாலை தான் வீடியோவை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார்.

பின்னர் பெரியநாயக்கன்பாளையம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். போலீசார் விரைந்து சென்று கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு படுக்கையில் கமலேசும், அவரது மனைவி மற்றும் குழந்தை வாயில் நுரை தள்ளியபடி பிணமாக கிடந்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். மனைவியின் நோய் பாதிப்பு காரணமாக தான் அவர்கள் இறந்தார்களா அல்லது எதற்காக அவர்கள் தற்கொலை செய்தனர் என்பது பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சென்னையில் ஆயுதப் படைக் காவலர் தூக்கிட்டு தற்கொலை!



**சென்னை, பிப்.3:** சென்னையில் ஆயுதப் படைக் காவலர் திங்கள்கிழமை அதிகாலை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சென்னை அயனாவரம் பகுதியில் ஆயுதப் படைக் காவலராகப் பணிபுரியும் விஜய் (வயது 27) என்பவர் சக காவலருடன் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், இன்று (பிப். 2) காலை 5.30 மணியளவில் பணிக்குச் செல்வதற்காக சக காவலர் தினேஷ் என்பவர் புறப்பட்ட நிலையில், கதவு வெளிப் பக்கமாக பூட்டப்பட்டிருந்துள்ளது.

தொடர்ந்து, வீட்டின் உரிமையாளர்களுக்கு தகவல் கொடுத்ததன் பேரில், வெளிப்பக்கமாக பூட்டப்பட்டிருந்த கதவை வீட்டின் உரிமையாளர் வந்து திறந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, அறையில் இருந்து வெளியே வந்து காவலர்கள் பார்த்தபோது, மற்றொரு அறையில் விஜய் தூக்கில் தொங்கியபடி சடலமாக இருந்துள்ளார்.

இதுதொடர்பாக, உடனடியாக காவல்துறை அவசர எண்ணுக்கு காவலர்கள் தகவல் கொடுத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறையினர் சடலத்தை மீட்டு உடற்கூராய்வுக்காக சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

காவலர் விஜய்யின் செல்போனை கைப்பற்றிய காவல்துறையினர் தற்கொலை குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தைப்பூசம்! பழனி முருகன் கோவிலில் ஒரே நாளில் 1.20 லட்சம் பக்தர்கள் தரிசனம்: அமைச்சர் சேகர்பாபு

**பழனி, பிப்.03:** பழனி முருகன் கோவிலில் வரலாறு காணாத வகையில் ஒரே நாளில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்திருப்பதாக அமைச்சர் சேகர்பாபு பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

மருதமலை முருகன் கோயிலில் மின் தூக்கி வசதியை அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைத்தார். மேலும், சுவாமி மலை கோவில் லிப்ட் வசதி பிப்ரவரி மாதம் இறுதிக்குள் நடைமுறைக்கு வரும் என்றும் அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

கோவை மருதமலை சுப்பிரமணியசாமி கோவிலில் தைப்பூச திருநாளில் பக்தர்களுக்கு மின் தூக்கி (லிப்ட்) வசதியை பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்த இந்து சமய அறநிலை துறை அமைச்சர் சேகர்பாபு, பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்பொழுது அவர் பேசுகையில், உலகெங்கிலும் இருக்கின்ற தமிழ் கடவுள் முருக பக்தர்களுக்கு தைப்பூசத் திருநாளில் முருகனை வழிபட்டு இறை அருள் வேண்டுவது, இன்றைக்கு வைக்கின்ற கோரிக்கைகள் முழுமையாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு, வருகின்ற முருக பக்தர்களுக்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



அதேபோல் பல திருக்கோயில் சிறப்பு கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கு முருகப் பெருமானை தரிசித்து வருவதாக கூறினார்.

உதாரணத்திற்கு நேற்று ஒரு நாளில் மட்டும் வரலாறு காணாத அளவிற்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் பக்தர்கள் பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் இறை தரிசனம் மேற்கொண்டு உள்ளனர்.

அதேபோல் திருச்செந்தூர், படை வீடுகளான திருத்தணி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, சிறுவாபுரி, வடபழனி இது போன்ற திருக்கோவில்களிலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் முருகனை வந்து தரிசித்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக இன்று காலை மங்களகிரி வேலாயுத சாமி திருக்கோவிலூரில் புதிதாக 8 கிலோ 600 கிராம் கொண்ட 13 கோடி ரூபாய் மதிப்பிலே வடிவமைக்கப்பட்டு உள்ள முழுக்க உபயதாரர்களால் செய்யப்பட்ட தங்கத்தேர் விழா இன்று முருக பக்தர்கள் பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐந்து நிலை கொண்ட அந்த ராஜகோபுரத்தில் திருப்பணி, மந்திரகிரி வேலாயுத சாமி திருக்கோவிலில் சுமார் 1.85 லட்சம் செலவில் ராஜகோபுரம் கட்டுகின்ற கட்டுமான பணிகளும் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ராஜகோபுரம் பொறுத்த வரை இந்த ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பிறகு 109 ராஜகோபுரங்கள் புதிதாக சுமார் ரூ.216.74 கோடி செலவில் அறிவிக்கப்பட்டதாகவும், அதில் 27 ராஜகோபுரங்கள் முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்தார்.

அதே போன்று ராஜகோபுரங்கள் மராமரத்து பணிகள் சுமார் 351 திருக்கோவில்களின் ராஜகோபுரங்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 93.84 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கீடு செய்து இதுவரை 182 திருக்கோவில்கள் மராமரத்து பணிகள் முடிவு அடைந்து உள்ளதாக கூறினார்.

"மருதமலைக்கு நீங்கள் வந்து பாருங்கள் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்து விடும்" என்ற பாடல் வரிக்கு ஏற்ப பந்நெடுங் காலமாக திருக்கோவிலில் காண வேண்டும் என்று வயது முதிர்ந்த மூத்தோர், உடல் நலக் குறைவு உள்ளோர் இந்த கோவிலை காண முடியாமல் ஏங்கி இருந்ததாகவும், சுமார் 8 ஆண்டுகளாக தொடங்கப்பட்ட இந்தப் பணி தற்போது நிறைவுற்று மின் தூக்கி அமைக்கப்பட்டு உள்ளதாகவும் அது இரண்டு தளங்களை கொண்டதாகவும் ஒரே முறையாக 40 பேர் பயணிக்கின்ற அளவுக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

மின் தூக்கி செல்வதற்கு கட்டணம் என்பது 30 ரூபாய் என்று நிர்ணயித்து உள்ளதாகவும், அது மாற்றுத் திறனாளிகளுக்கு முழுவதும் இலவசம் என்றும், நிறைமாத கர்ப்பிணிகளுக்கு சலுகைகள் என்று இன்றில் இருந்து என் அப்பன் முருகனை காண முடியாதவர்கள் எல்லாம் காணுகின்ற ஒரு நல்ல சூழ்நிலை திராவிட மாடல் அரசு நிறைவேற்றி உள்ளதாகவும் குறப்பிட்டார்.

இதற்கு முன்னால் அய்யர் மலை ரோப் கார், அதேபோல் சோளிங்க மலையினுடைய ரோப் கார், இது இரண்டும் திராவிட மாடல் ஆட்சியில் தான் பக்தர்கள் பயன்பாட்டிற்கு வந்தது என்பதை தெரிவித்துக் கொண்டு இதே போல் சாமி மலைக்கு ஒரு தானியங்கி லிப்ட் என்பது அடுத்த பிப்ரவரி மாதம் இறுதிக்குள் அதுவும் பக்தர்களுக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான, அனைத்து நடவடிக்கைகளும்மேற்கொண்டு உள்ளதாக கூறினார்.

## கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி விவசாயிகள் சாலை மறியல் போராட்டம்



**தஞ்சாவூர், பிப்.03:** டெல்டா மாவட்ட சாகுபடிக்காக மேட்டூர் அணை கடந்த ஆண்டு ஜூன் 12-ந்தேதி திறக்கப்பட்டு கடந்த மாதம் 28-ந்தேதி மூடப்பட்டது.

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தொடர் மழையால் அறுவடை பாதிக்கப்பட்டு சம்பா, தாளடி சாகுபடி காலதாமதமாக நடவு செய்யப்பட்டது.

இதனால் நெற்பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். தண்ணீர் இன்றி பயிர்கள் காய்வதால் மேட்டூர் அணையில் இருந்து இந்த மாதம் இறுதி வரை தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஆனால் மேட்டூர் அணை மூடப்பட்டு விட்டதால் விவசாயிகள் அவதி அடைந்தனர். இந்த நிலையில் இன்று காலை கல்லணையில் இருந்து கல்லணை கால்வாயில் 15 தினங்களுக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தி தஞ்சாவூர் அருகே வண்ணாரப்பேட்டை பகுதியில் திருவையாறு புறவழிச்சாலையில் காய்ந்த பயிர்களுடன் விவசாயிகள் திரண்டனர்.

பின்னர் டிராக்டரை சாலையில் மறித்து வைத்து சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தண்ணீரை திறந்து பயிரைக் காப்பாற்ற வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

இது குறித்து தகவல் அறிந்த அதிகாரிகள், போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது விவசாயிகள், ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவு செய்து நடவு செய்தோம். தற்போது தண்ணீர் இன்றி பயிர்கள் காய்வதால் பெரும் நஷ்டத்தை சந்திக்கும் நிலையில் உள்ளோம்.

உடனடியாக தண்ணீர் திறந்தால் மட்டுமே இந்த பகுதியில் சுமார் 5,000 ஏக்கர் சாகுபடியை காப்பாற்ற முடியும் என்றனர். இதையடுத்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர் .

இதனைத் தொடர்ந்து விவசாயிகள் மறியல் போராட்டத்தை கைவிட்டனர்.

இந்த சாலை மறியல் போராட்டத்தால் அந்தப் பகுதியில் கடும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மாதவரம் - பெங்களூருக்கு புதிய பேருந்து சேவை!

**மாதவரம், பிப்.03:** மாதவரத்தில் இருந்து பெங்களூருக்கு புதிய பேருந்து சேவையை அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தொடங்கியுள்ளது.

சென்னை மாதவரத்தில் இருந்து பெங்களூரு எல்லையான ஒசூா வரை பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், பெங்களூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனா.

இந்த கோரிக்கையை ஏற்ற அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், மாதவரத்தில் இருந்து கோயம்பேடு, பூந்தமல்லி, வேலூா, கிருஷ்ணகிரி, ஒசூா வழியாக பெங்களூருக்கு (தடம் எண்: 831 எம்யூ) புதிய வழித்தடத்தில் குளிா சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்து சேவையை தற்போது தொடங்கியுள்ளது.

இப்பேருந்து மாதவரத்தில் இருந்து காலை 9 மணி மற்றும் இரவு 9 மணிக்கு பெங்களூருக்கு புறப்பட்டுச் செல்லும். இதுபோல, பெங்களூரில் இருந்து காலை 9 மணி மற்றும் இரவு 9 மணிக்கு மாதவரத்துக்கு புறப்படும்.

## சென்னையில் பிப்.5 முதியவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம்



**சென்னை, பிப்.03:** ட்வின்டெக் ஹெல்த்கேர் சர்வீசஸ் சார்பில் மூத்த குடிமக்களுக்கான பிரத்யேக இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

பிப்ரவரி 5-ம் தேதி (வியாழக்கிழமை) காலை 09.30 மணி முதல் பிற்பகல் 03.30 மணி வரை சென்னை மேற்கு மாம்பலம், கல்பவிருக்ஷா சேவா மையத்தில் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

இது தொடர்பான அறிக்கையில், "இது முற்றிலும் இலவசமாக சேவை. அனுபவம் வாய்ந்த கண் பராமரிப்பு நிபுணர்களால் நடத்தப்படவுள்ளது.

சீரான மற்றும் வசதியான சேவையை உறுதி செய்ய முன் பதிவு கட்டாயமாகும்.

இதில் கலந்து கொள்ள விரும்பும் மூத்த குடிமக்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பிப்ர.4ம் அன்று அல்லது அதற்கு முன் 97104 85295 என்ற எண்ணைத் தொடர்புகொள்வதன் மூலமோ அல்லது 7575INDIA@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமோ பதிவு செய்துகொள்ளலாம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடல் ஆமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் 'செயற்கைக்கோள் ட்ராக்கர்' திட்டம்!

செயற்கைக்கோள் ட்ராக்கா் திட்டம் 'ஆலிவ் ரிட்லி' வகை கடல் ஆமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் உள்ளதாக வனத் துறைச் செயலா் சுப்ரியா சாகு தெரிவித்துள்ளாா்.

ஆண்டுதோறும் டிசம்பா் முதல் ஏப்ரல் வரை சென்னை தொடங்கி கன்னியாகுமரி வரை உள்ள தமிழக கடலோரப் பகுதிகளில் 'ஆலிவ் ரிட்லி' வகை கடல் ஆமைகள் முட்டையிடுவது வழக்கம். இதில், கடல் ஆமைகளின் கடல் வழிப் பயணம், இடமாற்றங்கள் குறித்து ஆய்வு செய்ய இந்திய வனவிலங்கு நிறுவனத்துடன் இணைந்து கடல் ஆமைகளின் மீது 'செயற்கைக்கோள் ட்ராக்கா்' பொருத்தும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதற்காக ரூ.84 கோடி ஒதுக்கப்பட்டது.



இந்நிலையில், தற்போது வரை 8 கடல் ஆமைகளின் மீது இந்த ட்ராக்காகள் பொருத்தப்பட்டு அவற்றின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இது குறித்து தமிழக வனத் துறைச் செயலா் சுப்ரியா சாகு 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: இதுவரை செயற்கைக்கோள் ட்ராக்காகள் பொருத்தப்பட்ட 8 ஆமைகளில், அரசி, கயல், இனியா, மலா், ஆதிரை என பெயரிடப்பட்ட 5 ஆலிவ் ரிட்லி ஆமைகளின் நகா்வு தொடா்பான தரவுகள் வரத் தொடங்கியுள்ளன. ஆரம்பக் கண்காணிப்பு தகவல்களின் அடிப்படையில், ஆமைகள் கடற்கரைக்கு அருகிலேயே அதிக நேரம் செலவிடுவதும், முட்டை இடுவதற்கு ஒரே கடற்கரைக்கு மீண்டும் மீண்டும் திரும்புவதும் தெரியவந்துள்ளது.

இத்திட்டம் ஆமைகள் மற்றும் அவை முட்டையிடும் பகுதிகளை எந்தவித இடையூறும் இல்லாமல் பாதுகாக்க உறுதுணையாக உள்ளது. ஆமைகள் அதிகம் கூடும் பகுதிகளை அடையாளம் காணவும், அறிவியல் ஆதாரங்களுடன் கூடிய கூட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் இந்த ஆய்வு பெரிதும் உறுதுணையாக உள்ளது எனத் தெரிவித்துள்ளாா் சுப்ரியா சாகு.

## நல்லகண்ணு மீண்டும் மருத்துவமனையில் அனுமதி!

**சென்னை, பிப்.03:** முதுபெரும் அரசியல் தலைவர் நல்லகண்ணு (100), சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் நேற்றிரவு (பிப். 1) அனுமதிக்கப்பட்டார்.


நல்லகண்ணுக்கு, மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு, அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு, வயோதிகம் காரணமாக வீட்டில் ஓய்வில் இருந்து வந்த நிலையில், கடந்தாண்டு ஆக. 22-ஆம் தேதி தவறி விழுந்து காயமடைந்தார். அப்போது மூச்சுத் திணறல் பிரச்னை ஏற்பட்ட நிலையில், சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் வெண்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர், அடிக்கடி மூச்சுத் திணறல் பிரச்னை காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பி வந்தார்.


இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவு மீண்டும் மூச்சுத் திணறல் பிரச்னை ஏற்பட்ட நிலையில், ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூத்த மருத்துவர்கள் அடங்கிய குழுவின் கண்காணிப்பில், நல்லகண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.



திருவண்ணாமலை பிப்ரவரி -2 தை மாத பௌர்ணமி,தைப்பூசம் முன்னிட்டு அண்ணாமலையார் மலை கிரிவலம் 14 கிலோமீட்டர் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்று வந்தார்கள். அண்ணாமலையார் உண்ணாமலையம்மனையும் வேண்டி அருள் பெற்றனர்.

# அரோகரா கோஷத்துடன் நடைபெற்ற தெப்பத் திருவிழா



வந்தவாசி, பிப் 03: தைப்பூசத் திருவிழா முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த வெண்குன்றம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத கைலாசநாதர் ஆலயத்தில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் முதலாம் ஆண்டு தெப்பத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

முன்னதாக மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு மாலை உற்சவ மூர்த்திகள் மேளதாளத்துடன் கோயில் பிரகாரத்தில் வீதியுலா நடைபெற்று, தெப்ப திருவிழா நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படத்தை இணைத்து ஆளுநரிடம் பட்டம் பெற்ற மாணவர்



**சென்னை, பிப்.03:** தமிழக அரசுக்கும் ஆளுநர் ஆர்.என். ரவிக்கும் இடையேயான மோதல் போக்கு, பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா உட்பட பல நிகழ்வுகளில் வெளிப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தமிழக உயர்கல்வி அமைச்சர்கள் ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களைப் புறக்கணித்துள்ளனர்.

இந்நிலையில், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

ஆளுநர் ஆர்.என். ரவி மாணவர்களுக்கு பட்டம் வழங்கினார். அப்போது மாணவர் புஷ்பராஜ் என்பவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் படத்தை இணைத்து ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் பட்டம் பெற்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தை அடுத்து முழு சோதனைக்குப் பிறகே மற்ற மாணவர்கள் மேடையேற அனுமதிக்கப்பட்டனர்.

கடந்தாண்டு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஆளுநரிடம் பட்டம் பெற மறுப்பு தெரிவித்த நாகர்கோவிலை சேர்ந்த ஜீன் ஜோசப் என்ற மாணவி, பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சந்திரசேகரிடம் பட்டம் பெற்றதால் அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வீரைக் கவிராஜ பண்டிதர் ஸ்வாமி அதிஷ்டானத்தில் ஆராதனை விழா

**சிவகங்கை, பிப்.3:** சிவகங்கை மாவட்டம் மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள திருப்பாச்சேத்தி அருகே உள்ள வேம்பத்தூரில் அவதரித்த கவிராஜ பண்டிதர் ஸ்வாமி இவர் வாராஹி பாமாலை, மதுரை மீனாட்சி அம்மன் மானாமதுரை ஆனந்த வல்லி அம்மன் புகழ் பாமாலை பாடி புகழ் அம்மன் அருள் ஆசியுடன் ஏராளமான பக்தர்களுக்கு ஆசிகளும் அற்புதங்கள் நிகழ்த்தி உள்ளார்.

இவருடைய அதிஷ்டானம் விருதுநகர் மாவட்டம் வீர சோழன் பகுதியில் உள்ளது. தைப்பூசம் தினத்தில் வீரை காவிராஜ பண்டிதர் ஸ்வாமிகள் 39-ஆம் ஆண்டு ஆராதனை விழா நடைபெற்றது. முன்னதாக சிறப்பு யாகம் அபிஷேகம் தீபாராதனை நடைபெற்றது. வீரைகவிராஜ பண்டிதர் ஜீவ சமாதியில் 39-ஆம் ஆண்டு அபிஷேக ஆராதனை விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

இதேபோல் வேம்பத்தூரில் உள்ள ஶ்ரீ ஆவுடையநாயகிஅம்மன் சமேத கைலாசநாதர் கோவிலில் உள்ள ஶ்ரீ கவிராஜர் பண்டிதர் ஸ்வாமி சன்னதியில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை வேம்பத்தூர் கவிராஜ பண்டிதர் பீடம் சார்பில் அதன் நிறுவனர் அருள்மிகு ஶ்ரீ வாராஹி உபாசகர் விஜயன் ஸ்வாமி செய்து இருந்தார்.








# வாழைமரம் பாலசுப்பிரமணியர் சுவாமி கோவிலில் தைப்பூச விழா பக்தர்கள் பால்குடம் காவடி எடுத்து வழிபாடு

சிவகாசி பிப் 3 விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகேஉள்ள துலுக்கன்குறிச்சி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ வாழைமர பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் தை பூசம் முன்னிட்டு பால்குட திருவிழா நடைபெற்றது. காலை சிறப்பு யாகம் தொடர்ந்து காலை 9 மணிக்கு அருள்மிகு துலுக்கன்குறிச்சி வீரகாளியம்மன் கோவிலில் இருந்து பால்குடம் வலம் வந்து வாழைமர பாலசுப்ரமணிய சுவாமிக்கு பால் அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரம் தீப ஆராதனை நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால்குடம், புஷ்ப காவடி எடுத்து வழிபாடு செய்தனர்.சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. அருள்மிகு ஶ்ரீ வாழை மரம் பாலசுப்பிரமணியர் சுவாமி திருக்கோவில் சிவகாசி சங்கரன் கோவில் சாலையில் வெம்பக்கோட்டை அருகே உள்ளது.





பூண்டி மகான் தைப்பூச திருவிழா.திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் வட்டம் பிப்ரவரி- 2 பூண்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகளின் தைப்பூச திருவிழா அபிஷேகம், அலங்காரத்துடன், வண்ணமலர் மாலைகளால் மகா தீபாராதனையும் நடைபெற்றது. கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.





திருவண்ணாமலை மாவட்டம் ,செய்யாறு ஆற்காடு சாலையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதிபராசக்தி கோயிலில் தனி சன்னதியாக அருள்மிகு சுப்பிரமணியர் அருள்பாலித்து வருகின்றார்.தைப்பூசம் முன்னிட்டு அருள்மிகு சுப்பிரமணியருக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை வழிபாடு நடைபெற்றது. உற்சவமூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். முன்னதாக விழா குழு தலைவர் முன்னாள் அமைச்சர் முக்கூர் என். சுப்பிரமணியன் தலைமையில் பெண்கள் பால்குடம் ஏந்தி ஊர்வலமாக வந்து பால் அபிஷேகம் நடைபெற்றது .திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# அரசியல் கார்னர்

# மாம்பழ சின்னம்: தேர்தல் ஆணையம் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு!



**சென்னை, பிப்.03:** அன்புமணி தரப்புக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கியதை எதிர்த்த வழக்கில் தேர்தல் ஆணையம் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாமகவின் பெயர், கட்சிக்கொடி, மாம்பழம் சின்னத்தை அன்புமணி அல்லது வேறு யாரும் பயன்படுத்த தடை விதிக்கக் கோரி, கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், அன்புமணி தலைமையிலான பாமகவை அங்கீகரித்த தேர்தல் ஆணையம், தலைவர் பதவியை நீட்டித்து, மாம்பழம் சின்னத்தையும் வழங்கியது.

இதுதொடர்பாக கடந்த ஆண்டு செப். 9 மற்றும் நவ. 27 ஆகிய தேதிகளில் தேர்தல் ஆணையம் இரு கடிதங்களை அன்புமணி தரப்புக்கு அனுப்பியுள்ளது. இதையடுத்து, சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையம் தமது தரப்புக்கே கடிதம் அனுப்பியிருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டிய ராமதாஸ் தரப்பு, அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் அனுப்பிய கடிதத்தை ரத்து செய்யக்கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில், கட்சியின் தலைவராக நீடிப்பதாக போலி ஆவணங்களை அன்புமணி தரப்பு தாக்கல் செய்துள்ளதாகவும், தலைவர் என்ற முறையில் தனது முகவரிக்கு கடிதம் அனுப்ப தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு தலைமை நீதிபதி அமர்வு முன்பு திங்கள்கிழமை(பிப். 2) விசாரணைக்கு வந்தது.

அப்போது இவ்விவகாரத்தில் தேர்தல் ஆணையம் 3 வாரத்தில் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அநீதி, அராஜகம்... திருவள்ளுவர் இன்று இருந்தால் திமுக குறித்து இப்படி எழுதியிருப்பார்! - விஜய்



**சென்னை, பிப்.03:** திருவள்ளுவர் இன்று இருந்திருந்தால் திமுக குறித்து எப்படி திருக்குறள் எழுதியிருப்பார் என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னை பனையூரில் நடந்த தவெகவின் 3ஆம் ஆண்டு தொடக்க விழாவில் அவர் பேசுகையில், தமிழ்நாட்டில் மிகப்பெரிய கட்சியாக நாம் வளர்ந்திருக்கிறோம். நாம் மிகப்பெரிய கட்சியாக வளர கோடிக்கணக்கான மக்கள்தான் காரணம். உங்களை நம்பித்தான் நானும், நம் கட்சியும் இருக்கிறோம். அது உங்கள் அனைவருக்கும் தெரியும். 2017க்குப் பிறகு, 2021க்குப் பிறகு தமிழ்நாட்டின் நிலைமையை மக்கள் யோசித்துப் பார்க்கின்றனர். காமராஜர், அண்ணா, எம்ஜிஆர் இருந்த இடத்தில் இவர்களும் இருக்கிறார்களே என மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

இன்று இந்த கண்ணீரைத் துடைக்க ஆரம்பித்த இயக்கம்தான் தவெக. இப்படி பேசினால் சிலர் கொந்தளிப்பார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது. அது அவர்கள் வேலை. ஊடகத்தை சந்திக்க மாட்டார். தில்லியை விமர்சிக்க மாட்டார் என என்னைப் பற்றி கிண்டலாகப் பேசுகின்றனர். 1977 மாதிரியே அரதப் பழசான, தேய்ஞ்சுபோன அதே ஆயுதத்தை கையில் எடுக்கின்றனர். காமராஜருக்கு இலக்கியம் என்றால் என்னனு தெரியுமா? புலவரா என கிண்டல் செய்து கொந்தளித்தனர். எம்ஜிஆரின் அனுபவம் தெரியுமா?. விஜய்க்கு என்ன அனுபவம் உள்ளது? எனக் கேட்கின்றனர்.

விஜய்க்கு என்ன அனுபவம் எனப் பேசுகிறவர்கள்தான் அன்று எம்ஜிஆரையும் அப்படிதான் பேசினார்கள். மாபெரும் மக்கள் சக்தியாக நம் தலைமையில் ஒரு அணி, திமுக கூட்டணி, பாஜக தலையில் மற்றும் பலர். எத்தனை அணிகள் வந்தாலும் திமுகவை வீழ்த்துவதற்கு மாபெரும் மக்கள் சக்தியான தவெகவால்தான் முடியும். விஜய் வீட்டை விட்டு வெளியே வா என்கின்றனர். தேர்தலில் ஒவ்வொரு வீட்டில் இருந்து ஒரு விஜய் வாக்களிப்பர். அன்று தெரியும் ஏன் விஜய்யை அழைத்தோம் என நீங்கள் வருத்தப்படுவீர்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் தவெக இருப்பதை கருத்துக் கணிப்பு எடுப்பவர்கள் பார்க்கலாம். தவெக நகரத்தில்தான் இருக்கிறது, கிராமத்தில் இல்லை என பேசுபவர்கள் இப்படி டெஸ்ட் செய்து பாருங்கள். அம்மா, அப்பா, தங்கைகள், தம்பிகள் தவெகவுக்கு வாக்களிப்பதை யாராலும் தடுக்கவே முடியாது. கட்சித் தொண்டர்கள், அமைச்சர்களின் அட்ராசிட்டியை பார்த்து தூக்கம் வரவில்லை என முதல்வர் கூறியிருக்கிறார். விசில் சின்னத்துக்குதான் வாக்களிப்பேன் என தூக்கத்தில் இருந்து எழுப்பிக் கேட்டால் கூட முதல்வரே கூறுவார்.

டிஜிட்டல் உலகில் திருவள்ளுவர் இருந்திருந்தால் திமுக என்ற தீயசக்தி குறித்து திருக்குறள் எழுதியிருப்பார். அநீதி, அராஜகம், தில்லுமுல்லு இவையெல்லாம் திமுக முதற்றே உலகு என திருவள்ளுவர் எழுதியிருப்பார். பவள விழா பாப்பாவுக்கு என்ன தெரியும்? பழைய டப்பாவை உருட்டத்தானே தெரியும். அதற்காக அவர்கள் செய்யும் தவறை சொல்லாமல் இருக்க முடியுமா? சொல்லிக்கொண்டே இருப்போம். மக்களின் ஒரே பிரதிநிதி நாம் மட்டும்தான், நாம்தானே அவர்களை கேள்வி கேட்க முடியும். மக்களுடைய ஒரே பிரதிநிதி நாமதான். இவ்வாறு குறிப்பிட்டார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: PAPERBOYNEWSPAPER@GMAIL.COM